மாதர் மறுமணம்

"MATHAR MARUMANAM."



மலர் 3. இதழ் 11

பிரமாதி ஆனி

Annas 1½. 10 Cts.

"மாதர் மறுமணம்" சந்தா விபரம்.

வருஷ சந்தா இந்தியா, சிலோன் முதலிய
உள்நாட்டுக்கு ... ரூ. 1—0—0

பர்மா, மலாயா, சைகோன், தென்னாபிரிக்கா முதலிய
வெளிநாட்டுக்கு ... ரூ. 1—8—0

தனிப்பிரதி ... ... ரூ. 0—1—6

வி. பி. மூலம் அனுப்ப இயலாது. முன்பணமாகவே செலுத்த வேண்டும். வெளிநாட்டிலுள்ளவர்கள் 2ஷில்லிங் 6 பென்ஸ் அனுப்ப வேண்டும்.

விலாச மாறுதலுக்கு சந்தா எண்ணைக் குறிப்பிட்டு கடிதமெழுதவும் மாதிரிப்பிரதி வேண்டுவோர் $1\frac{1}{2}$ அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

காரியதரிசி,
மாதர் மறுமண சகாய சங்கம், காரைக்குடி

உள்ளுறை

சஞ்சலம் தீர்க்கவேண்டும் (பாட்டு)

— M. K. சுதன் 1

விதவைத் துயர் —(இராம கிருஷ்ணன்) 3

மாதருலகம்—திருமதி ச. மு. பார்வதிப் பிள்ளை, டர்பன் 4

துன்பம் துடைத்து இன்பம் இயற்றுக (பாட்டு)

— C. N. விகடன் 8

எனது வாழ்க்கை—ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் 9

தினகர-சுந்தரி—ச. முனிசாமி பிள்ளை 18

தமிழ் நாட்டுப் பெண்ணிளஞ் சிங்கங்களே எழுமின்!

—முத்துக்கணபதி 23

மனம்போல மாங்கல்யம் (த. ரா) 28

தனவணிக ஸ்திரீகளுக்கு

— ஸ்ரீமதி சா. மு. விஸ்வநாதன் 41

கணவனும் மனைவியும்—(ப. நீ.) 42

தேயிலைப் பானம் தயாரிக்கும் முறை 44

நிகழ்ச்சிகள் 46

குமரன் புத்தகசாலை.

வ. உ. சிதம்பரம் பிள்ளை எழுதியது.

மனம்போல வாழ்வு	0-8-0
திருக்குறள் (அறத்துப்பால்)	1-0-0
மெய்யறம்	0-8-0
சாந்திக்கு மார்க்கம்	0-8-0
அகமே புறம்	0-8-0
மெய்யறிவு	0-8-0

வ. வே. சு. ஐயர் எழுதியது.

சந்திரகுப்த சரித்திரம்	0-6-0

இதர புத்தகங்கள்.

ஞான வாசிட்ட மூலமும் உரையும் 2 பாகமும்	6-0-0
நைடதம் மூலமும் உரையும்	4-0-0
சிதம்பர ரகசியம்	0-8-0
உப்பள முற்றுகை	0-4-0
பக்தியோகம்	0-8-0
தேவோபாசன தீபம்	0-6-0
பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை (சீர்திருத்தக்கதை)	0-4-0
மநுநீதி மர்மம்	0-2-0
ரோமியோ ஜூலியட் (ஷேக்ஸ்பியர் நாடகக் கதை செய்யுள்)	0-4-0
இகபரஞானசாகரத் திரட்டு	0-6-0
பெரிய விக்கிரமாதித்தன் கதை	1-0-0
தாசிகள் மோச வலை (நாவல்)	1-4-0
நந்தனார் கீர்த்தனை	0-4-0
தோத்திரக்கோவை	0-6-0
இராமாயண ஆராய்ச்சி	0 4-0
சொர்னவல்லி	0-12-0
கூழைரங்கன்	0-12-0
அமிர்தவல்லிமாலை	0-3-0
நமது பலசரக்குக்கடை	0-6-0
நாயன்மார்	0-3-0
குட்டிச்சாத்தான் கட்டுரைகள்	0-3-0
பதிற்றுப்பத்தந்தாதி	0-3-0
மாதர்மறுமணம்	0-4-0
பத்மநாதன் அல்லது களவுபோன வைரப்பதக்கம்	0-12-0
மானகஷ்ட வழக்கு	0-1-0
ஜீவகாருண்யத் திருக்குறள்	0-6-0
ஜீவகாருண்யப்பாடல் திரட்டு	0-3-0
சந்திரமதி அல்லது தற்காலத்து தமிழ் மகள்	0-2-0
கைம்பெண்ணின் கண்ணீர்	0-1-0
தேசீய கீதங்கள்	0-2-0
காசில்லாமல் உபதேசம்	0-1-0
பலதிரட்டு	0-1-0
கடவுளும் கோயிலும்	0-1-0
சமரச சன்மார்க்க தோத்திரத்திரட்டு	0-4-0
சைவசமய சாரம்	0-1-0
சுயராஜ்யம் யாருக்கு?	0-1-0
மாதர் மறுமணப் பாடல் திரட்டு	0-2-0
அநியாயக் கல்யாணம்	0-0-6
இரண்டு கட்டுரைகள்	0-1-0
தமயந்தி நாவல்	0-8-0
சோதிடப் புரட்டு	0-2-0
சுயமரியாதைத் தாலாட்டு	0-2-0
புராண ஆபாசங்கள்	0-3-0
ராமலிங்க சுவாமி பாடல்	0-2-0
சுயமரியாதைத் தத்துவ கீதங்கள்	0-3-0
சுயமரியாதைப் பாடல்	0-2-0

மானேஜர், 'குமரன்' ஆபீஸ், காரைக்குடி.

மாதர் மறுமணம்.

பத்திராதிபர்:— மு. மரகதவல்லி.

மலர் 3	காரைக்குடி பிரமாதி-ஹு ஆனி-மீ	இதழ் 11

சஞ்சலம் தீர்க்க வேண்டும்?

(M. K. சுதன், நேமத்தான்பட்டி)

[ஆனந்தக் களிப்பு இசை]

(1) மாதர் மறுமணம் செய்ய—இந்த
மாநிலத் தாரொரு மைப்பட வேண்டும்
சாதலை யேஎதிர் நோக்கும்—இளம்
சகோதரி யார்சஞ்ச லம்தீர்க்க வேண்டும்.

(2) சின்னஞ் சிறுகிளி யேபோல்—உள்ள
சேயிழை தன்னை மணந்தோன்ம றைந்தால்
பின்னு மவர்மணம் செய்தே—உயிர்
பேணில் புவியது ஏற்கவொண் ணாதோ?

(3) பாவை தனைக்கொண்ட நாதன்—பத்
தாறுவ ருடங்கள் வாழ்ந்தன னேனும்
பாரி யிறப்பளே யாயின்—மறு
பாவை தனைக்கொளல் தான்முறை யாமோ?

(4) ஆண்களுக் கோர்நீதி யென்றும்—அவர்
அண்மை யுள்ளபெண் ணுக் கோர்நீதி யென்றும்
காண்பது தான்நீதி யாமோ—இரு
கண்ணைப் பிரிவினை செய்திட லாமோ?

(5) கண்ணை யுறுத்துநோய் தோன்றில்—அதைக்
கண்டு களைய மனமெண்ணு மன்றோ?
பெண்ணை வருத்தும் விதவை—யெனும்
பேரைக் களைவதற் கெண்ணுமை நன்றோ?

(6) கண்ணில் இடம்வலம் என்றே—இந்தக்
காசினி மன்னுவ ரெண்ணுத லுண்டோ?
பெண்ணினம் தம்மை வருத்தும்—பெரும்
பேய்க்குணம் தான்ஒழிந் தேகிட லென்றோ?

(7) பெண்ணைச் சிறுமைசெய் தேசம்—அவை
பெற்றி யுடைத்தாகு மோமிக நாசம்
கண்ணைப் படைத்த பெரியீர்—இதைக்
கண்டு திருத்திடற் கேதான் முனைவீர்?

(8) நாத னிழந்திட்ட நங்கை—அவள்
நல்லுரு தன்னை நலிந்திடச் செய்யீர்
ஓது மறுமண நீதி—உணர்ந்
தோல மிடும்விதந் தானோர்க் கருள்வீர்!

(9) பாண்டவர் தம்மையீன் றாள்தான்—இந்தப்
பாரில் விதவையென் றானவ ளன்றோ?
மீண்டும் புருடனைக் கூடிப்—புவி
மீதுசந் ததியுண் டாக்கின ரன்றோ?

(10) கால வழியது நோக்கி—இளம்
கைம்பெண் கவலையைத் தீர்த்திடல் வேண்டும்
ஞாலத் தவரேநன் றோர்ந்து—இந்த
நல்ல பணிசெய முன்வர வேண்டும்? (மாதர்)

விதவைத் துயர்.

கிளிக்கண்ணி

(இராம. கிருஷ்ணன்)

1. விதவை விதவையென்றே வேதனை செய்ததினுல்,
பதறியே மாத ருள்ளம்—கிளியே
சிதறியே வாடுகின்ருர்

2. மாதர் படுந்துயரம் மரகதவல்லி கண்டு
ஆதரவான சங்கம்—கிளியே
அணங்குகட் கெனவமைத்தார்

3. விதவைதான் வேண்டமான்னர், வீரர் முருகப்பாவும்
சதிசெய்பல் சண்டாளரின்—கிளியே
சங்கதி தானுரைத்தார்

4. முப்பத்து ஆறுகோடி முதல்வனும் காந்தி மகான்
செப்பினுர் விதவைத்துயர்—கிளியே
செய்தியிதறிந்துமே

5. ஐந்து வயதுடைய அறியாச் சிறுமியையும்
அந்தோ! விதவை என்ருல்—கிளியே
ஆறறிவுண்டோ சொல்நீ

6. ஆடையணி யிழந்து அமங்கிலியாகி நைந்து
வேடர்கை யம்பைப்போல—கிளியே
மூடர்தம் முனையில் நின்ருர்

7. நாதனிழந்த பின்பு நறு மணம் செய்வித்தலே
நல்லதாம், நல்லதாமே—கிளியே
யல்லலொழியு மன்ருே?

8. தெருவில் நடந்தால் குற்றம், தெய்வத்தை நொந்தால் [குற்றம்
மருவிய விதியிதென்று—கிளியே
மானிட ருண்டு செய்தார்

9. சேதி யிதறிந்துமே செப்பினேனி ராமகிஷ்ணன்
ஓதியுணர் வார்கட்கு—கிளியே
உண்மை விளங்கிடுமே

10. வாழ்க! சகாய சங்கம் வாழ்கவே! என்றென்றுமே
வீழ்க! விதவைத்துயர்—கிளியே
வீழ்கவே! வீழ்க! வீழ்க!

மாதருலகம்

(தென்னுப்பிரிக்கா டர்பன் திருமதி ச.மு. பார்வதிப்பிள்ளை எழுதியது)

முன்னுரை

பழையன கழிதலும் புதியன புகுதலும் உலக இயல்பு. பழைய கொள்கைகள் அசட்டுத்தனமானவை யென்று பட்டம் சூட்டப்பெறுதலும், புதிய கொள்கைகள் அனுஷ்டிக்கப் பெறுதலும் நாம் காணும் காட்சி. பழய வழக்கங்களில் முழு நம்பிக்கை கொண்டுள்ளவர்கள் சீர்திருத்தக்காரர்களைக் கண்டு "நீங்கள் பித்தர்கள். நீங்கள் சொல்வதை அனுஷ்டானத்தில் கொண்டுவந்தால் உலகமே அழிந்துபோம்!" என்று சீறுவதும், சீர்திருத்தக்காரர்களோ இக் கூச்சலைக் கவனியாது தாங்கள் கோலிய மார்க்கத்திலேயே சளைக்காது செல்வதும், சர்வசாதாரணம். சீர்திருத்தங்களின் அவசியத்தையும், சக்தியையும், மேன்மையையும் சிறிதேனும் கவனியாது 'பழையன வாதலின் மேலானவை' என்னும் ஒரே நம்பிக்கை கொண்ட பழம் பெருச்சாளிகள் சீர்திருத்தக்காரர்களுடன் சண்டையிட்டுப் போர் புரிவதும், சீர்திருத்தக்காரர்கள் முட்டுக்கட்டைகளைக் கவனியாது பழைய வழக்கங்களைத் தள்ளி மிதித்திடலும், எங்கணும் பிரசித்தம். ராஜீய உலகிலும் சரி, சமூக விஷயங்களிலும் சரி, இதற்கு உதாரணங்கள் துலங்கக்காணலாம். ஒவ்வோர் பிரச்னைக்கும் சாதக பாதக அபிப்பிராயங்களுண்டு. ஒன்று பிற்போக்கானதாயும், மற்

றென்று முற்போக்கானதாயும் இருக்கலாம். முற்போக்கானது முதலில் முன்னணியில் நிற்கத் தடைப்பட்டாலும் இறுதியில் வெற்றியே பெறும். இத்தகைய சிக்கலான பிரச்னைகளுள் மாதர் விஷயமும் ஒன்றாகும்.

மாதரின் மேன்மை

உலகம் நாளுக்கு நாள் விருத்தியடைவதற்கும், ஆண் மக்கள் சந்தோஷ வாழ்வு பெறுதற்கும் மாதர் இன்றியமையாதவர்கள். ஓர் ஆணுக்கு ஒரு பெண்ணாக உலக ஜனத்தொகை இருக்கிறது. விருப்பும் வெறுப்பும் ஆண் பெண் இரு பாலார்க்கும் ஒன்றே. உலகினுக்கு ஆண் மக்கள் எவ்வளவு அவசியமோ, பெண் மக்களும் அவ்வளவு அத்யாவசியமானவர்களே. ஆதலின், ஒருவர் தாழ்வென்றும், மற்றவர் மேலானவரென்றும் கருதுவது கூடாது. ஒழுக்க விதிகள் ஒருவர்க்கு ஒன்றாகவும், மற்றவர்க்கு நேர்மாறானதாகவும் இருப்பது அநியாயமாகும். இருபாலர்களின் அபிவிருத்தியும், நல் வாழ்வும் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருப்பதால் ஒரு பாகம் தாழ்வுற்றால் வேறொன்று தாழ்வுறுவதும், ஒன்று அபிவிருத்தியடைந்தால் வேறொன்றும் அபிவிருத்தியடைவதும் இயல்பேயாகும்.

சுய நிர்ணய உரிமை

மாதர் பிரச்னையைப்பற்றி ஆண் மக்கள்மட்டும் கவனிப்பது போதாமல் பெண்களும் விசேஷ கவனம் செலுத்தலவசியம். ஏனெனில் பெண்களின் குணங்கள், குறைகள், வேண்டுவன வேண்டாதன அனைத்தும் அவர்களுக்குத்தான் சரிவரத் தெரியும். மேலும் அவர்களுக்கும் சுய நிர்ணய உரிமையையும் நாம் தரக் கடமைப்பட்டிருக்கிறோம். அதனால் ஆண் மக்கள் அதிக சக்தியும், உதவியும் பெற்றவர்களாகின்றனர். அன்றியும், நாம் கோரும் சமூக சீர்திருத்தங்களில் பற்பல நமது பெண்மணிகளின் பரிபூரண ஆதரவிருந்தால்தான் நிறைவேறும். மாதரின் அநுதாபமும், ஆதரவுமில்லாவிடில் ஆண் மக்கள் கோரி நிற்கும் சிற்சில சீர்திருத்தங்கள் ஈடேறாமற் போவதல்லாமல் எதிர்பாராத தொல்லைகளும் நேருவது சகஜமாகிவிடும்.

பிறரை அறிக

நமது பெண்மணிகள் சீர்திருத்திக் கொள்ளவேண்டியவை அநேகமுண்டு. கற்கவேண்டியதும் பலவுண்டு. பொது அறிவு பெறவேண்டியதும் வெகு வெகு அவசியமாகும். ஆதலின், பிற நாடுகளில் மாதர் நிலைமை அந்தஸ்து முன்னேற்ற மடைந்துள்ள வழிகள் அவர்களின் மனோபாவம் முதலியவற்றை நன்கறிய வேண்டும். பிறருடைய நிலைமையைப்பற்றிய விவரங்களை யறிந்தால் நமது நிலைமை, குறைகள், எவ்வாறு சீர்திருத்திக்கொள்ளப் படவேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும். ஆதலால் மாதரின் முன்னேற்றத்தையும், நல்லொழுக்கத்தையும் அறிவு வளர்ச்சியையும், குறிக்கோளாகக்கொண்டு மாதருலகம் என்னும் தலைப்பின்கீழ் விஷயங்களைத் திரட்டி வெளியிடுவோம். படித்த சகோதரிகள் அவற்றைப் படித்துப் பயன் பெறுவதன்னியில், அறியாமைப் படுகுழியில் ஆழ்ந்துள்ள சகோதரிகளுக்கு அவர்களின் கணவன்மார் வாசித்து விளக்கிக் காட்டத்தவறமாட்டார்களென்றும் நம்புகிறோம்.

மாதர் முன்னேற்றம்

உலக மாதர் நாளுக்கு நாள் முன்னேற்றப் பாதையில் செல்வதை நாம் காண்கிறோம். புதிய புதிய உரிமைகளுக்காகப் போராடுவதையும் கவனிக்கிறோம். கலா ஞானத்திலும் மானிட வாழ்வின் ஒவ்வோர் அம்சங்களிலும் சம அந்தஸ்து பெற வேண்டுமென்று முயற்சிப்பதையும் கண்டு வருகிறோம். தங்கள் முன்னேற்றத்திற்குத் தடைக் கற்களைப்போன்றுள்ள பழைய காலத்து மூட நம்பிக்கைகளையும், வழக்கங்களையும் சிறுக சிறுகத் தள்ளியும் வருகின்றனர். ஆண் மக்களுக்கு இல்வாழ்க்கையில் உதவியும், சந்தோஷமு மளிக்கும் சக்திவாய்ந்த மாதர் உலக வாழ்க்கையில் உதவியளிக்கவும், பொது வாழ்விலீடுபடவும் திறனுண்டென்பதையும் காண்பித்து வருகின்னர். ஆதலால், மாதர் முன்னேற்றத்தைக் கண்டு மகிழ்வெய்துவதன்னியில் அன்னார் வேண்டும் உதவியளிக்க ஆண் மக்கள் கடமைப்பட்டுள்ளார். மாதர் முன்னேற்றம் உலக முன்னேற்றமாகும்.

நன்மை கடைப்பிடி

பிற நாட்டுப் பெண்கள் நிலையைக் கண்டு அந்நிலையை நமது சகோதரிகளும் அடைய எண்ணுவது பிசகு. உதாரணமாக ஐரோப்பியப் பெண்களின் மனோபாவத்திற் கேற்றதோர் திருத்தம் இந்தியப் பெண்மணிகளின் மனோபாவத்திற் கொவ்வாததாயிருக்கலாம். வேறு சில சீர்திருத்தங்கள் மனித வர்க்கத்திற்குத் தீமை பயப்பனவாயிருக்கலாம். இவற்றை நாம் வெறுத்துத் தள்ள வேண்டும். மேலும் நம் நாட்டுப் புராதன பழக்க வழக்கங்களுக் கநுசரணையாகவே நாம் நமது வாழ்வைச் சீர்திருத்த முன் வர வேண்டும். நமது புராதனக் கொள்கைகள் அனைத்தையும் நாம் கைவிட வேண்டுமென்பதல்ல. நமது பழைய வழக்கங்களையும், நமது நிலைமையையும் சீர்திருத்தங்களையும், பிற நாட்டினர் அநுபவுங்களையும், ஒருங்கே யோசித்து எவ்வெவ்வற்றில் என்னென்ன நன்மையுண்டோ அவற்றைக்கொண்டு நமது வாழ்வைச் சீர்திருத்திக்கொள்ள வேண்டியதே முறையாகும். புதிய கொள்கைகளை அனுஷ்டிக்க முன் வருகையில் குலதர்மிகளும், மதாபிமானிகளென்று சொல்லிக்கொள்வோரும் சத்தம் போடுவர். ஆனல், கால சக்கரம் மகோன்னதமான சக்திவாய்ந்தது. அஃது சுழன்று சுழன்று காலப் போக்கையும் மனிதர் மனோபாவத்தையும் அடியோடு மாற்றிவிடும். இவ்வுண்மையை அனைவருமறிதல் அவசியம்.

விதவை கண்ணீர்

வீட்டை அழிக்கும்

துன்பம் துடைத்து இன்பம் இயற்றுக!

(C. N. விகடன்)

உள்ளங் குமுறலையோ? நமது
உடலும் வேர்க்கலையோ?
கள்ளங் கபடற்ற—கைம்பெண்
கலக்கங் கண்டதுமே!

நெஞ்சு துடிக்கலையோ? நமது
நெற்றி சுருங்கலையோ?
கொஞ்சுங் குழந்தையினக்—கைமைக்
கோலங்கள் பார்க்கையிலே!

பற்றி எரியலையோ? வயிறு
பதைத்து வேகலையோ?
சிற்றிடைச் சிறுமிகளை—விதவைச்
சிறையில் காணையிலே!

ஆதியில் செய்துவந்த—மூட
அபத்தம் நீக்கியிங்கு
நீதியாய்ப் பெண்களுக்கு—மறுமண
நிச்சயஞ் செய்திடுவோம்!

எனது வாழ்க்கை

(ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட்)

[பண்டித ஜவஹர்லால் நேருவின் சகோதரியும், ஐக்கிய மாகாண மந்திரிகளில் ஒருவருமான ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் சமீபத்தில் லக்ஷ்மண்புரியில் நிகழ்த்திய ரேடியோச் சொற்பொழிவு]

நான் சிறிய பெண்ணாயிருந்த காலத்தில், ஒரு பெரிய பணக்காரர், வழக்குத் தொடர வேண்டி என் தகப்பனாரிடம் வந்திருந்தார். குதிரை சவாரி செய்துகொண்டிருந்த என்னைக் கண்டு அவர் பிரமித்துவிட்டார். எனக்கு இவ்வளவு சுயேச்சையளிப்பது அவசியமாவென்றும், ஒரு ஆண் பிள்ளையைப்போன்று, ஆங்கில ஆசிரியையிடத்தில் கல்வி போதிப்பது நல்லதாவென்றும் அவர் என்து தகப்பனாரைக் கேட்டார்.

ஸ்ரீமதி விஜயலக்ஷிமி பண்டிட்.

அப்பெரிய மனிதரின் நோக்கம், அக்கால மனிதரைப் போன்று குறுகிய நோக்கத்திற்குட்பட்டிருந்தது. அப்பெரியார் என்மீது அன்புகொண்டிருந்தார் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அவர் எனக்கு ஒரு பெரிய பணக்காரப் புருஷர் வாய்ப்பாரென்றும், அதிகமான ஓய்வு கிடைக்குமென்றும், எதிர்காலத் திட்டங்களை யோசித்துக்கொண்டு, என்னைப்பற்றி அவர் அப்படிக் கூறினார். அப்பெரியாரின் வார்த்தைகள், எங்கள் குடும்பத்தில் வினோ

தச் சொற்களாய்விட்டன. நான் ஏதாவது புதிய தேவைகளைப் பற்றி எனது தகப்பனரிடம் கூறுவேனானல், எனது தகப்பனர் சிரித்துக்கொண்டே அப்பெரியாரின் வார்த்தைகளை ஞாபக மூட்டுவதுடன், என்னை வீணுகக்கெடுத்து விடுவதாகவும் அவர் கூறுவார்.

அநேக வருஷங்கள் கழிந்துவிட்டன. எதிர்பாராத சம்ப வங்கள் பல நிகழ்ந்துவிட்டன. நான் சட்ட சபையில் இடம் பெற்றிருக்கும் தற்போது, எனது கல்வி முறையைக் கண்டனம் செய்த அப்பெரியாரின் குமாரர் சட்டசபையில் எனக்கு எதிராக உட்கார்ந்திருப்பதைக் காண்கின்றேன். இவரும் காலத்திற்கேற்ற முறையில் அபிவிருத்தி யடையவில்லை யென்ற விஷயத்தை யான் சொல்ல அஞ்சுகின்றேன். அக்காலத்தில் அவரது தகப்பனர் எனது கல்வி முறையை வெறுத்ததுபோன்றே, இக்காலத்தில் எனது புதிய உத்தியோக முறையையும் அவர் வெறுக்கின்றார்.

வாழ்க்கை முறையைப்பற்றி ஒரு சிலர் குறைகூறினும், அநேகர் புகழ்ந்தாலும் நாம் ஈடுபட்டிருக்கும் தொழிலை நன்ருகச் செய்ய வேண்டியது நமது கடமை.

குடும்பத்தில் ஒரே குழந்தையாய் நான் வளர்க்கப்பெற்ற தனல் மிகச் செல்வமாய் வளர்த்து, என்னைக்கெடுத்துவிட்டனர். எனது சகோதரர் எனக்கு அநேக ஆண்டுகள் மூத்தவராதலாலும், எனது இளைய சகோதரி, எனக்கு அநேக ஆண்டுகள் இளையவள் ஆதலாலும் நான் பிறந்தபொழுது, ஒரே குழந்தையாகச் செல்வ மாக வளர்க்கப்பெற்றேன். இந்தியாவில் பெண்களைச் செல்வமாக வளர்த்துக்கெடுப்பது கிடையாது. ஆதலால் எனது எதிர்கால வாழ்க்கையில் அநேக கஷ்டங்கள் நேரிடுமென்று எனது குடும்ப விஷயத்தில் சிரத்தைகொண்டவர்களும், சிநேகிதர்களும் அடிக் கடி கூறி வந்தனர்.

மற்றவர்களைப் போன்று என்னைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பவில்லை, ஏனெனில், வீட்டிலேயே கல்வி போதிப்ப தனல், எனது எதிர்காலத்துக்கு உபயோகமாயிருக்கு மென்று, எனது பெற்றோர்கள் கருதினர்கள். ஆதலால், எனக்குக் கல்வி போதிக்க, ஓர் ஆங்கில ஆசிரியையை ஏற்படுத்தினர்கள்.

அவ்வாங்கில ஆசிரியை சொந்தத் தேவைகளை யறிந்து, வேண்டிய விஷயங்களில் கவனம் செலுத்திவந்தாள். எனக்கு அநேக ஆசிரியர்கள் அநேக விஷயங்களைப் போதித்து வந்தனர். இத்தகைய கல்வி முறையை நான் அங்கீகரிக்கவில்லை. எனது ஒன்றுவிட்ட இளைய சகோதரர்கள், பள்ளிக்கூட வாழ்க்கையைப் பற்றி சொல்லும் ருசிகரமான கதைகளைக் கேட்டு நான் பொறுமையடையலானேன். எனினும், சில விஷயங்களில், பள்ளிக்கூட மாணவர்களைக் காட்டிலும் அதிக அபிவிருத்தி யடைந்திருந்தேன். ஆனல் அவர்களுக்குத் தெரிந்திருந்த ஒரு சில விஷயங்கள் எனக்குத் தெரியாமலிருந்தன. இது எனக்கு அதிருப்தியை உண்டாக்கியது. ஆனல் எனது திட்டப்பிரகாரம் வேலைசெய்து வந்த பொழுது, இந்த அதிருப்திகளெல்லாம் மறையலாயின.

குதிரை மீது முதலில் நான் சவாரி செய்தது எனது ஞாபகத்திற்கு வருகின்றது. நான் சிறு குழந்தையாயிருக்கும் பொழுது, ஒரு குட்டிக் குதிரையின் முதுகில் ஏற்றிவைக்கப்பெற்றேன். நீண்ட வாலுள்ள வெள்ளைக் குதிரைக் குட்டி என்னை ஏற்றிக் கொண்டு, சுற்றிச் சுற்றி வட்டமாக ஓடிவந்தது எனக்கு இன்னும் ஞாபகமிருக்கின்றது. குதிரைச் சவாரிக்கென நியமிக்கப் பெற்றிருந்த ஆசிரியர், அலகபாத்தில் தற்போது சுயராஜ்ய பவனம் இருக்கும் மைதானத்தைக் குதிரைச் சவாரிக்கு ஏற்ற தகுதியான மைதானம் என்று அப்பொழுது கருதினர். எனக்கு குதிரை சவாரி செய்வதில் அபாரப் பிரியம். எனது கன்னிப் பருவத்தில், மிக மிக ஆனந்தகரமான நாட்கள் எவையெனில் குதிரையின் மீது ஏறிச் சவாரி செய்த நாட்களேயாகும். சவாரி செய்வதற்கென நியமிக்கப்பெற்ற பூட்சுகளை அணிந்ததும், தத்திப்பொத்தி சேணத்தின் மீது ஏறி சவாரி செய்ததும், குதிரை சவாரியின் வீரப் பிரதாப விளையாட்டுகளும், தற்போது எனது கவனத்திற்கு வருகின்றன. ஆனந்த பவனின் பெரிய அழகிய தோட்டங்களில் என்னுடைய விளையாட்டுகளும், பாடங்களும் எந்த வகையிலும் தவருமல் தினசரி நடைபெற்று வந்தன. கோடை காலங்களை, நாங்கள் மலைவாசத்தில் ஆனந்தமாய்க் கழித்தோம். குழந்தைப் பருவத்தில், மிக்க பாதுகாப்புடன்

வளர்க்கப்பெற்று வந்த போதிலும் இத்தகைய நிகழ்ச்சிகளில் சுயேச்சையுடன் கழித்தேன்.

இக்காலத்தில் பதினைந்து வயதுள்ளவர்களுக்கு, எனது தினசரி வாழ்க்கை முறை மந்தமானதாய்த் தோன்றும். எனது பாலியப் பருவ நிகழ்ச்சிகளில் சில என் பதினைந்து வயதுள்ள குமாரத்திக்கு மகிழ்ச்சியை யளிக்கின்றன. எனது பாலிய பருவத்தில், அதிகமான சுயேச்சை எனக்குக் கிடைத்திருந்தும், நான் சினிமாவுக்குச் செல்வதில்லை. எனது ஆசிரியை நான் சினிமாவுக்குச் செல்லக்கூடாதென்று மிகவும் கண்டிப்பாய் இருந்தார். நல்ல சினிமாப் படங்களுக்குக்கூட அவர் அதிக ஆதரவு அளிக்கவில்லை. இப்படி யிருந்தபோதிலும் நான் சில சினிமாப் படங்களுக்குச் சென்றிருந்தேன். இப்பொழுது என்னுடைய குழந்தைகள் சினிமாக்களைப் பார்த்து உடனே மறந்து விடுவது போலன்றி, நான் அப்பொழுது பார்த்த சினிமாக்களின் இன்பத்தை நன்றாய் நுகர்ந்தேன். இந்தப் பருவத்தில் நடனமாட வேண்டுமென்ற, பெருத்த ஆர்வம் என்னிடையே தோன்றியது. இத்தகைய எண்ணம் என்னிடையே தோன்றக் கூடாது என்று எனக்குப் போதிக்கப்பட்டது. அப்பொழுது இக்கண்டிப்பு மிக்க துன்பத்தை விளைவித்தது; அதனால் என் வாழ்க்கை இருள்மயமாய் விட்டதுபோல் தோன்றியது. பின்னால், பலவித வேலைகளிடையே, அச்சம்பவம் எனது மனதை விட்டு அகன்றது. எனது மூன்று குமாரத்திகளில் ஒருவராவது நடனத்தில் ஆசை செலுத்தாமலிருப்பது, கவனிக்கவேண்டிய தொன்றாகும்.

எனது பதினைந்து வயதிற்குப் பிறகு எனது வாழ்க்கை அசாதாரண நிகழ்ச்சிகளுக்கு இடமாயிருந்தது. எனது பெற்றோர்களின் இல்லம், அக்காலத்திய பெரிய மனிதர்கள் சந்திக்குமிடமாயிருந்தது. இளமையிலிருந்தே எனது தந்தையரின் விருந்தினர்களை உபசரிக்குந் தொழிலை நான் மேற்கொண்டேன். பத்திரிகைகளில் பெயர் பிரசுரிக்கப்பெறும் பெரிய மனிதர்களையும் சீமாட்டிகளையும் அப்பொழுது அடிக்கடி சந்திப்பதுண்டு.

காங்கிரஸ் மகாநாட்டிற்கு முதன் முதல் நான் சென்றது குறிப்பிடவேண்டியது நிகழ்ச்சிகளில் முக்கியமானது.

காங்கிரஸ் மகாநாட்டிற்காக பம்பாய்க்கு என்னை அழைத்துச் செல்வதாக எனது தகப்பனர் தெரிவித்தபொழுது, நான் அப்பொழுது அடைந்த மகிழ்ச்சி இன்றும் என் ஞாபகத்திற்கு வருகின்றது. 1915-ம் ஆண்டில் காங்கிரசின் முறை, வினோதமாயிருந்தது. அழகிய ஆடைகளை அணிந்துகொண்டு, இந்தியாவின் பல பாகங்களிலிருந்து வரும் மக்களைச் சந்திப்பதும் விருந்துகளுக்குச் செல்வதும் அக்காலத்தில் சிறப்புற்றிருந்தன. அப்பொழுது நான் மிக்க இளையவளாயிருந்தபடியால், அரசியல் நுணுக்கங்களை அறிய முடியாத நிலைமையிலிருந்தேன். மகா யுத்தம் ஐரோப்பாவில் கொடுமையாக நடைபெற்றிருந்தும், அது அப்பொழுது எனது மனதை இழுக்கவில்லை. ஆனல் எனது பம்பாய் விஜயம், அநேக ஆண்டுகள் வரை எனது ஞாபகத்தில் நிலைபெற்றிருந்தது. முதன் முதலாக அப்பொழுது விருந்துகளிலும், தேக்கச்சேரிகளிலும் கலந்துகொள்ள ஆரம்பித்தேன். அநேக இளைய வாலிபர்களைச் சந்திக்கவும், வாலிபப் பெண்கள் விரும்பும் கதைகளை வாலிபர்களிடமிருந்து கேட்கவும் தருணத்தை சிருட்டித்தது. பம்பாயிலிருந்து அலகபாத்திற்குத் திரும்பினதும், அலகபாத் ஒரு மந்தகரமான இடமாக எனக்குத் தோன்றியது.

1918ம் ஆண்டில் ஜலியன்வாலா துக்க சம்பவம் நிகழ்ந்தது. அந்த பயங்கரமான நிகழ்ச்சியினாலும், அதற்குப் பின்னல் நிகழ்ந்த விளைவுகளினாலும் பாதிக்கப்பெற்ற இல்லங்களில் எங்கள் வீடும் ஒன்று. அப்பொழுது வாழ்க்கைத் துறையில் விழிப்படைந்து விஷயங்களைக் கவனமுடன் ஆராயலானேன். அப்பொழுது வாழ்க்கை சம்பவங்களில் அநேகம் எனக்குத் தெரியா. அவை தெரியாதிருக்கும்படியும் பாதுகாக்கப் பெற்றுவந்தேன். அந்த சமயம் அநேகர்களுக்கு மன அதிர்ச்சியைக் கொடுக்கும் சமயமாயிருந்தது. இதுவரை யான் வாழ்க்கையில் அநேக விஷயங்களில் கவனம் செலுத்தவில்லை.

ஆனல் இதற்குப்பிறகு, எனது வாழ்க்கையில் புதிய முறையில் மாறுதல்கள் செய்து கொள்வதற்கு முயற்சி செய்தேன்.

இன்று பொதுமக்களின் சொத்தாய் விளங்கும் ஆனந்த பவனில், அன்று வசித்திருந்தவர்களின் வாழ்க்கையில் மகாத்மா காந்தி பிரவேசித்ததைப்பற்றி, திருப்பித் திருப்பிக் கூறவேண்டிய அவசியமில்லை. இயற்கையாகவே, அவருடைய மந்திர சந்திக்கு நானும் கட்டுப்பட்டுவிட்டேன். மகாத்மா எங்கள் குடும்பத்தில் நுழைந்துவிட்டபிறகு, எங்கள் வாழ்க்கையில் மாறுதல் ஏற்பட்டது. அந்த மாறுதலுக்கு ஏற்ற முறையில், நான் அவருடனும் கலந்துகொண்டு சந்தோஷமாகவும், பரிபூரணமாகவும் ஒத்துழைக்க ஆரம்பித்தேன்.

1920ம் ஆண்டில், முதன் முதலாக எனது கணவரைச் சந்தித்தேன். எனது வாழ்க்கையில் அந்நாள் முக்கியத்துவம் பெற்று விளங்குகின்றது. காஷ்மீர் பெண் ஒருவளை மணப்பதற்கு, கத்தியவாரிலிருந்து ஒரு ஆடவர் வர நேர்ந்ததற்கு என்ன சந்தர்ப்பம் நேரிட்டது என்று என்னுடைய குழந்தைகள் சில சமயங்களில் கேட்பதுண்டு. அந்த சந்தர்ப்பம் அதிர்ஷ்டம் வாய்ந்த சந்தர்ப்பம் என்று கூறுவதைத் தவிர, அந்தக் கேள்விக்கு வேறு எத்தகைய பதிலுமில்லை. அப்பொழுது நிகழ்ந்த நிகழ்ச்சிகள், திரையிட்டு மறைத்துவிட்டதுபோல் தோன்றுகின்றன.

அவர் (எனது புருஷர்) "தாங்கள் என்னை மணந்துகொள்கின்றீர்களா" என்று கேட்டார்.

"அநேக மைல்களைக் கடந்து நான் தங்களிடம் வந்திருக்கிறேன். எதிர்காலத்தில் நாம் கைகோத்து, நமது வாழ்க்கைப் போராட்டங்களைக் கடந்து செல்லவேண்டும்" என்று அவர் கூறினர். 1921ம் ஆண்டு மே மாதம் 9ந் தேதியன்று எங்கள் கலியாணம் நடைபெற்றது. தாம்பத்திய வாழ்க்கையில் ஈடுபட்ட இளைய தம்பதிகளாகிய நாங்கள், கலியாண சமுத்திரத்தில் இறங்கிய வருஷம், கஷ்டமாகவே தோன்றியது. எங்களுடைய வாழ்க்கையில் அநேக போராட்டங்கள் ஏற்பட்டன. சில போராட்டங்கள் எங்களுக்குப் பெருந்துன்பத்தை யளித்தன. எனினும்

அவைகளை நாங்கள் ஒன்ருகவே சேர்ந்து கடந்துசென்ருேம். எங்களது கலியாணம் நடைபெற்று 18 வருஷங்கள் ஆனபிறகும் தற்போது, நாங்கள் முதன் முதல் சந்தித்த நாளை நினைக்கும் பொழுது, அளவு கடந்த மகிழ்ச்சி ஏற்படுகின்றது.

ஒவ்வொரு ஸ்திரீயின் வாழ்க்கையிலும் மகிழ்ச்சியளிப்பது போன்றே, எனது வாழ்க்கையிலும், எனது மூன்று குழந்தைகள் மகிழ்ச்சியளிக்கின்றன. சந்திர லேகா, நயனதாரா, ரிதா விதாஸ்தா ஆகிய எனது மூன்று குழந்தைகளும் என் வாழ்க்கையில் இன்ப மூட்டுகின்றன.

போதிய அவகாசம் நான் அவர்களிடையே செலுத்த வேண்டியிருப்பது எனக்கு முடியாத காரியமாயிருக்கிறது. சில சமயங்களில் இந்த எண்ணம் என்னைத் துன்புறுத்துகிறது. ஒவ்வொருவர் வாழ்க்கையிலும் கடமைக்கும் மற்றைய வேலைகளுக்கும் போராட்டம் நிகழ்வது போன்றே, என் வாழ்க்கையிலும் நிகழ்ந்திருக்கின்றது. நான் செல்லுகின்ற வழி சரியான வழியா யில்லாவிட்டால், எனது குழந்தைகள் என்னை மன்னிக்க வேண்டும். ஏனெனில் அவர்கள் என்னை அன்பாய் நேசிப்பதுடன், எனது அன்பர்களாயு மிருக்கின்றனர்.

1932 ஜனவரி 26ந் தேதி சுயேச்சை தினக்கொண்டாட்டத்தில், நான் கைது செய்யப்பெற்றுச் சிறைச்சாலைக்கு அனுப்பப்பெற்றேன். நான் மிக்க மகிழ்ச்சியடைந்தேன். எனக்கு அருமையானவர்கள் அனைவரும் சிறைச்சாலையிலிருந்தனர். எதற்காக அவர்கள் கைது செய்யப்பெற்ருர்களோ, அந்த வேலையைத் தொடர்ந்து செய்வதே என்னுலான காரியம். எத்தகைய மாறுதலுமின்றி ஒரே விதமாக இருந்ததுதான், 12 மாத சிறைவாசத்தில் நான் குறிக்கவேண்டிய முக்கிய விஷயம். சிறைக்கு வெளியே நாட்கள் விரைந்து கழிவது போன்று, சிறைக்குள்ளே எளிதில் நாட்கள் கழியவில்லை.

என்னைச் சிறைசெய்தபொழுது எனது இளைய குழந்தைக்கு 2½ வயது. நான் சிறையிலிருந்த முழு வருஷமும், குழந்தைகளிடமிருந்து என்னைப் பிரித்து வைத்திருந்தது எனக்கு மிக்க துன்பமாயிருந்தது.

அதற்கு அடுத்த வருஷங்கள் எனக்குப் பலவித வேலைகளை யளித்தன. அவைகளைப்பற்றி யெல்லாம் கூறுவது முடியாத காரியம். குடும்பக் கஷ்டங்கள் எங்கள் குடும்பத்தில் நுழைந்தன. தேசீயப் பிரச்னை தேசத்தைப் பயமுறுத்தியது. வாழ்க்கையானது சில நாட்களில் மெதுவாகவும், சில நாட்களில் விரைவாகவும் சென்றுகொண்டிருந்தது. எப்பொழுதும் சில வேலைகள் நடை பெற்று வந்தன.

1935ம் ஆண்டு, அலகாபாத் முனிசிபல் தேர்தலில் கலந்து கொண்ட அங்கத்தினர்களில் நான் ஒருவள். தேர்தலில் வந்த பிறகு, கல்விக் கமிட்டியின் தலைவர் பதவியை ஏற்றேன். இது எனக்கு ஒரு புதிய சோதனையாகும். இத்தகைய நிலைமையில் $1\frac{1}{2}$ வருஷத்தில் நான் அநேக விஷயங்களை அறிந்துகொண்டேன். இதுவரைக் கலந்துகொள்ளாமலிருந்த அநேக விஷயங்களில் கல ந்துகொள்ள சந்தர்ப்பம் ஏற்பட்டது. அநேக பொதுக் கூட்டங் களில் தலைமை வகிக்க சந்தர்ப்பம் ஏற்பட்டது. சிறிய வகுப்பு வாத பிரச்னைகளை முன்னிட்டு, அக் கூட்டங்கள் அமைதியாயில்லை. எனது சொந்த நகரத்தின் மக்களை நான் அறிந்து கொண்டேன். பொதுவாக தேச மக்களின் பொது வாழ்க்கையில் முக்கியமான பொதுப் பிரச்னைகளையும் அறியலானேன். முனிசிபல் போர்டு அங்கத்தினர் என்ற முறையில், சகோதர அங்கத்தினர்களுடன் சேர்ந்து உழைக்கும் புதிய அனுபவத்தையும் பெற்றேன்.

1939ல் நடைபெற்ற பொதுத் தேர்தல் எனக்கு மிகவும் பிர சித்தமானது. கான்பூரைச் சார்ந்த கிராமங்களில் தேர்தல் பிர சாரங்கள் நடைபெற ஆரம்பித்தன. இதுவரை தேர்தல் என்பது எனக்கு அவ்வளவு பிரமாதமாயில்லை. ஆனல் அந்த சமயத்தில் நான் பலத்த எதிர்ப்பை சமாளிக்கவேண்டி யிருந்தது.

பொதுத் தேர்தலுக்குப் பிறகு புதிய தேர்தல் ஒன்று வந்தது. ஒவ்வொரு மணியும், காங்கிரஸ் கட்சியினர் வெற்றிபெற்று வரு கின்றனர் என்ற செய்திகள் வந்து கொண்டே யிருக்கின்றன. எனது தோழர்களும், சிநேகிதர்களும் வெற்றிபெற்று வருகிறார்க ளென்ற செய்தி எனக்கு மகிழ்ச்சியை யளித்தது. இத்துடன் 1937 ஜூலை மாதத்தில் ஒரு நாள் நடைபெற்ற நிகழ்ச்சிக்குச்

செல்கின்றேன். அன்றைய தினம், பண்டித கோவிந்த வல்லப பந்த், மந்திரி சபையில் நான் சேர வேண்டுமென்று ஒரு தந்தி அனுப்பியிருந்தார். இந்தத் தந்தி என்னை இருதலைக் கொள்ளி எறும்பு நிலைக்குக் கொண்டுவந்து விட்டது. பதவி ஏற்றுக்கொள் வது தீது என்பது எனது அபிப்பிராயம். ஆதலால் நான் பதவி ஏற்புக்குச் சாதகமாயில்லை. ஆனால் மற்றொரு வகையில், காங்கிரஸ் அங்கத்தினர் என்ற முறையில் எனக்கு மேலிருப்பவர்களின் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிய வேண்டியவளா யிருந்தேன். மந்திரி பதவி ஏற்கவேண்டுமென்று எனக்கு வந்த தந்தி, மற்றும் சில விஷயங்களை எனக்கு விளக்கிக் காண்பித்தது. ஐக்கிய மாகாண மந்திரி சபையில் எனக்கு ஒரு மந்திரி பதவி அளிப்பதன் மூல மாக, ஆணுக்கும் பெண்ணுக்கும் சரி சமத்துவத்தைக் கையாள வேண்டும் என்ற கொள்கையில் காங்கிரஸ் முயன்றது. நான் மிகக் குழப்பமடைந்தேன். என்ன செய்வதென்று எனக்குப் புரியவில்லை. நான் யாருக்கு மதிப்பு செலுத்துகின்றேனோ, அவர்களது அபிப்பிராயம், நான் பதவி ஏற்கவேண்டு மென்பதற்குச் சாதகமாயிருந்தது. இந்நிலைமை என்னைப் பதவி ஏற்கும்படி செய்தது. இது சம்பந்தமாக, எனது பதினெட்டு மாத அனுபவங்களைத் தற்பொழுது தெரிவிப்பது மிகையாகும். ஆனால் தற்போது நான் சென்றுகொண்டிருக்கும் கடினமான பாதையில், தங்களுடைய கூட்டுறவினாலும், நம்பிக்கையினாலும், அன்பினாலும் உதவி செய்து வரும் சிநேகிதர்களுக்கும் மற்றவர்களுக்கும் எனது அன்பார்ந்த வந்தனங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நான் அதிர்ஷ்டசாலி. எனது வாழ்க்கையில், அநேகர் உதவி செய்திருக்கின்றனர். நான் காரியங்களை நல்ல முறையில் செய்தால், என்னை அதிகமாகப் புகழ்கின்றார்கள். நான் தவறிழைத்தாலோ மன்னித்து விடுகின்றார்கள். இந்தக் காரணத்தினாலேயே, என்னுடைய வேலையை நான் சரிவரச் செய்துகொண்டு செல்கின்றேன். எதிர்காலத்தில் ஏதாவது கஷ்டமான விஷயங்கள் தோற்றமானாலும் எனது தேச மக்கள் என்மீது காட்டும் அன்பு அக்கஷ்டங்களைப் போக்குவதற்குரிய தைரியத்தையும், அவசியமான சக்தியையும் அளிக்குமென்று நான் அறிகின்றேன்.

தினகர—சுந்தரி

(ச. முனிசாமி பிள்ளை)

வெய்யிற்கால மாதலால் தினகரனுக்கு ஆற்றிலிறங்கி ஸ்நானம் செய்யப் பிரியமுண்டாயிற்று. உடனே தன் ஸ்நான வஸ்திரங்களை எடுத்துக்கொண்டு, ஆற்றை அடைந்து உடுப்புகளைக் களைந்து ஆற்றிலிறங்கி மீன்போல் விளையாடி நீந்தலானன்.

குளிர்ந்த நீர், அவனது மனோகரமான உணர்ச்சியுடன் கலந்துகொண்டது. ஆனந்தமாக வெகுநேரம் ஆற்றின் மத்திவரைச் சென்று நீந்தி வரலானன்.

பின்னர் கரை சேர்ந்து தனது உடம்பைத் துவட்டிக்கொண்டிருக்கும்போது, பொதுஜனங்கள் நடமாடும் அவ்வாற்றின் பாலத்தின் மேல் வெண்ணிறப் பட்டாடை உடுத்திக் கையில் ஒரு குழந்தையுடன் நிற்கும் ஒரு ஸ்திரீயைக் கண்டான்.

அந்த ஸ்திரீ தன் கையிலிருந்த குழந்தையைப் பெரு வெள்ளமாய் ஓடிக்கொண்டிருந்த பிரவாகத்தில் நழுவவிட்டாள். திடீரென்று தினகரனின் மனம் மாறுபட்டது. அந்த ஸ்திரீ கைதவறிக் குழந்தை விழுந்துவிட்டதாகப் பாசாங்கு செய்ததையும் தினகரன் கவனித்தான். மேலும் அவள் முகத்தில் வருத்தக் குறி சிறிதாவது காணுமற் போனது ஆச்சர்யமாயிருந்தது. எனினும் தினகரன், “மற்ற விஷயங்களைப் பிறகு யோஜிப்போம்” என்று முடிவு செய்தவனய் மறுபடியும் குபீரென்று அலைகளூடே பாய்ந்தான். குழந்தை ஆற்றில் மிதந்துகொண்டும் சற்று மூழ்கிக்கொண்டும் செல்வதைக் கண்டான். அக் குழந்தையை ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து தூக்கித் தோளில் சேர்த்து அணைத்துக் கரை சேர்த்தான்.

குழந்தையை உற்றுப் பார்த்தான். அது குழந்தையைப் போல் ரப்பரால் செய்யப்பட்ட நூதன பொம்மை. தினகரன் கோபங்கொண்டவனய் அதைத் தூக்கி வீசி யெறிந்தான். அது ஆற்றின் நடுவில் விழுந்து மேலும் கீழுமாக ஊஞ்சலாடிக்கொண்டே சென்றது.

பாலத்தைப் பார்த்தான். வெண்ணிறப் பட்டாடை உடுத்தியிருந்த அந்த ஸ்திரியைக் காணேம். அவளுக்குப் பதிலாக ஒரு வாலிபன் பாலத்தின் மேல் நிற்பதைக் கண்டான். சீக்கிரத்தில் உடுத்திக்கொண்டு, "அந்த ஸ்திரியைக் கண்டதுண்டா?" என்று அவ்வாலிபனிடம் சென்று விசாரித்ததில், அவனுக்கு அந்த ஸ்திரியைப்பற்றி அதிகம் தெரியாதென்றும், ஆனல் ஒரு பொம்மையை அவள் சதா கையிலே வைத்திருக்க வேண்டுமென்று அவளுடைய சொந்தக்காரரால் வற்புறுத்தப்பட்டிருக்கிறுள் என்பது மாத்திரம் தனக்குத் தெரியுமென்றும், தினகரன் பொம்மையை வீசியெறிவதைக் கண்டு நகைத்துக்கொண்டே போய்விட்டாளென்றும் கூறினன்.

தினகரனுக்கு அவ் வெண்ணிறப் பட்டாடை மாதின் செய்கையின் அர்த்தத்தை எவ்வளவோ யோசித்துப் பார்த்தும் கண்டுபிடிக்க முடியவில்லை. எப்படியாவது அவளைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று முடிவுசெய்தவனுய் தன் வீட்டை நோக்கி நடந்தான்.

தினகரன் 'போர்ட் எலிசபத்' (Port Elizabeth) வாசி. வயது 22. செல்வமுடையவன். ஓவியங்கள் தீட்டுவதில் பிரியமுடையவன். கலா ரசிகன். மணமாகாதவன்.

ஃ ஃ ஃ

தினகரன் மறுநாள் மாலைவேளை போர்ட் எலிசபத்தைச் சார்ந்த கடற்கரையை அடைந்து மணலில் வெகுநேரம் உட்கார்ந்திருந்தான். மாலை வேளையின் இன்பமான காற்று இயற்கையின் வசம் அவனை இழுத்துச் சென்று சங்கீதத்தில் ஆழ்த்திவிட்டது. கம்பீரமான கண்டத்வனியில் தேசிய கவி சுப்ரமண்ய பாரதியாரின் இனிய கீதங்கள் வாரி இறைக்கப்பட்டன.

தினகரன் பாட்டை முடித்தான். சற்று தூரத்தில் மெல்லிய ஆடை துவள—அன்னமென ஓர் நங்கை நடந்துவருவதைக் கண்டான். இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து அறிந்துகொண்டனர். எந்தப் பெண்ணுக்காக ஆற்றில் நீந்தி 'ரப்பர்' பொம்மையை எடுக்கச் சென்றுனே, அதே பெண்தான் அவள். மேகங்களற்ற நீல நிற வானத்தில் பூர்ண சந்திரன் பிரகாசித்தால்

எவ்வாறு இருக்குமோ அவ்வாறே அவள் முகாரவிந்தம் பிரகாச மாயிருந்தது. அரை நொடியில் அப் பெண்ணரசி தனது கண் களை மீட்டிக்கொண்டு அவனைப் பார்த்து ஒரு புன்னகை அரும்பி னாள்.

அச்சமயம் தினகரன் மனதில் இன்னதென விவரிக்க இயலாத உள்ளக் கிளர்ச்சி உண்டாயிற்று. அவளுடைய இனிமை கலந்த முகம் அவனுடைய மனதில் படிந்துவிட்டது.

அப்பெண் சுற்று முற்றும் நோக்கிவிட்டு தினகரனை நோக்கி "நீங்கள் யாருக்காக இங்கே காத்துக்கொண்டிருக்கிறீர்களோ?" என்று கேட்டாள்.

"யாருடைய வரவையும் நான் எதிர்பார்க்கவில்லை. ஆனால் உன்னைப்பற்றிய எண்ணம் மாத்திரம் என்னை விட்டகலவில்லை" என்று சொல்வதால் தோஷமில்லை யென்றே நம்புகிறேன் என்று பதிலளித்தான் தினகரன்.

அவளுடைய கனிந்த பார்வை தினகரனை அப்படியே உருக்கி விட்டது. எழுந்து அவள் மெல்லிய கரத்தைப்பற்றி, "நான் ஒரு குற்றவாளி" என்றான்.

"குற்றவாளியா? ஏன்?" என்றாள் அப்பெண்மணி.

"ஆம்! அதாவது உன்மேல் காதல் கொண்ட குற்றம் செய் திருக்கிறேன். உன்னுடைய பதிலில் எனது வாழ்க்கையின் மர்மம் முழுதும் அடங்கியிருக்கிறது. இந்த இருண்ட உலகில் தீபம் போன்ற உன்னை ஆஸ்ரயிக்கிறேன். மேலும் உனது திரு நாமத்தை நானறியும்படி மனம் வைத்துப் புகலுவாயோ?" என் றான் தினகரன்.

"சுந்தரி" என்று புன் முறுவல் செய்தாள் அப்பெண்மணி.

சுந்தரி! என்று தினகரனுடைய இதழ்கள் அவளுடைய அதரங்களைத் துணிகரமாகத் தழுவின. இருவரும் ஒன்றாகக் கலந்தனர். இருள் சூழும் சமயமும் நெருங்கிற்று.

தினகரன் அவளை நோக்கி "சுந்தரி! இருள் சூழ்கிறது. நாளை யன்று உன்னை இதே இடத்தில் சந்திப்பேன் போய் வருக!" என்று விடைகொடுத்தான்.

மறுநாள் மாலை காதலர்கள் சந்தித்துப் பேசிக்கொண்டிருந் தார்கள். தினகரன் சுந்தரியின் முகவாய்க் கட்டையைத் தனது கரத்திலேந்தி "நாமிருவரும் கள்ளர்கள். இவ்வாறு திருட்டுத் தனமாக வந்து நமது காதலைத் தெரிவித்துக்கொள்ள வேண்டி யிருக்கிறது" என்ருன்.

"அப்படியானல் கள்ளர்கள் உற்பத்திசெய்யப்படுவதற்கு இந் துக்களாகிய நாம் கையாளும் கொள்கைகளே காரணமாகு மல்லவா?" என்ருள் சுந்தரி.

"சுந்தரி! அப்படிக் கூறுவதற்கு என்ன காரணம்?" என்று கேட்டான் தினகரன்.

"காதலுக்கு மட்டும் இந்துமதக் கோட்பாடுகளை மாற்றி யமைக்கவேண்டுமென்பதே எனது அபிப்பிராயம்" என்ருள் சுந்தரி.

"அப்படியானல் போலிக் காதலும் காமுகர்களும் அதிக மாகக் கிளம்புவதற்கு ஏதுவாகுமே?" என்ருன் தினகரன்.

"செய்கிற காரியத்தை எவ்வளவுக் கெவ்வளவு பகிரங்கத்துக் குக் கொண்டுவருகிருேமோ, அவ்வளவுக்கவ்வளவு மக்கள் உலக ஞானம் பெறுகிருர்கள். அப்பொழுது ஏமாறுவதும் ஏமாற்று வதும் கிடையா. ஒரு பெண் ஒரு ஆணுடன் தனித்துப் பேச அனுமதியாத இக்காலத்தில்தான் ஏமாற்றுதல் அதிகம் ஏற்படுகி றது. உதாரணமாக நான் இப்பொழுது உங்களை ஏமாற்றிவிட் டிருக்கிறேன். எப்படியெனில் நான் மணமானவள்" என்று பெருமூச்சுடன் கூறிமுடித்தாள் சுந்தரி.

தினகரன் முகத்தில் ஒருவித களை தோன்றி, "மோசம் போ னேன்" என்று கதறினன்.

"என் வாழ்க்கை தங்கள் கையிலேயே இருக்கிறது. எனது கதையைக் கேளுங்கள்" என்று பேச ஆரம்பித்தாள் சுந்தரி.

"காதலரே! நான் வாழ்க்கைப்பட்ட எனது கணவர் ஒன்றுக் கும் உபயோகமில்லாத மனிதர். ஒரு பெண் தனது கணவனிட மிருந்து நியாயமாக எதெதை விரும்புவாளோ அவைகளில் ஒன்ருவது நான் அவரிடமிருந்து பெற்றேனில்லை. சூதுவாது

இல்லாதவர்; ஆனால் மனித சுபாபமறியாதவர். அவரை மணந்த நாள் முதல் அவரிடம் என்றும் புருஷ சுகம் எதிர்பார்த்துப்பெற்ற தில்லை. நான் கலியாணமாகியும் கன்னிகையாகவே இருக்கிறேன். போதும் போதாததற்கு 60 வயதான அவருக்குப் பைத்தியம் சுலபமாகப் பிடித்து மாண்டுவிட்டார்.

"அந்தோ! எனது பெற்றோர் பணத்துக் காசைப்பட்டு என்னை அவ்வயோதிகருக்குத் தத்தஞ் செய்துவிட்ட செயலைப் பொறுக்காமல் தெய்வம் அவர்களையும் விண்ணுலகுக் கனுப்பிவிட்டது. மேலும் இப்போது புருடன் வீட்டில் எனது நாத்தனார் இவர்களால் பெறும் தொந்தரவுகள் சகிக்க இயலாதன. என்னை என் புருஷன் வீட்டைவிட்டு ஓட்டாண்டியாக விரட்டுவதற்கு என்ன வழியென்று யோஜித்துக் கொண்டிருக்கின்றனர். ரப்பர் பொம்மையைச் சுமக்கச் செய்த கொடுமையைப்பற்றிக் கூற என் நா கூசுகிறது. கடைசியாக என்னைப் பாலத்தண்டை தாங்கள் சந்தித்த நாளன்றுதான் யான் எல்லாவற்றிற்கும் துணிந்துவிட்டேன். இடையில் எனது வாழ்வை உய்விக்க வந்த தெய்வம் போல் தாங்கள் வந்து உதித்தீர்கள்."

சுந்தரி கூறியவற்றை யெல்லாம் கேட்ட தினகரனுக்கு என்ன பதில் சொல்வதென்று தோன்றவில்லை. சிறிது யோசித்தான். ஆண்பிள்ளைகள் பெறும் உரிமையில் பாதி பங்கு பெண்களுக்கு அளிக்கப்படுவதில்லை என்று தெரிந்தான். ஆண்பிள்ளையைப் போலவே அவசியம் நேர்ந்தால் பெண்ணும் மறுமணம் செய்து கொள்ளலாம் என்று யோசித்தான்.

அவன் சுந்தரியின் மேல் கொண்டிருந்த காதலோ அளவிட இயலாதது. தன்னைத் தஞ்சமென்றடைந்த ஒரு பெண்ணைத் திரஸ்கரிக்கப் போனதற்கு வருந்தினான்.

சுந்தரியின் கண்களில் கண்ணீர் வெள்ளமென ஓடியவாறு இருந்தது. ஆவலே வடிவாகத் தனது கரங்களை அவன்பால் நீட்டினாள்.

தினகரன் அப்படியே அவளை இழுத்துத் தன்பால் சேர்த்தணைத்து அவளைக் கைவிடேனென்று உறுதி கூறுவான்போல் அவளுடைய மலர்ந்த இதழ்களில் தனது இதழ்களை வைத்து ஒரு ஆழ்ந்த முத்தமிட்டான்.

தமிழ்நாட்டுப் பெண்ணிளஞ் சிங்கங்களே எழுமின்!

(காரைக்குடி முத்துக்கணபதி)

தேனினும் இனிய செந்தமிழ்ச் சுவையைப், சித்தர்கள் பலர் மூத்தியடைந்துள்ள முத் "தமிழை"

"பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான்தருவேன்—கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் "தமிழ்" மூன்றுந் தா"

என்று நமது தமிழ்க் கவியரசி ஔவைப் பிராட்டியார் பால், தேன், பாகு, பரும்பு, ஆகிய நான்கு சுவை வஸ்துக்களைத் தருகிறேன். ஆனால் நீ எனக்கு இந்நான்கு வஸ்துக்களைக்காட்டிலும் சுவை தரக்கூடிய இனிய முத் "தமிழை"த் தந்தருள வேண்டுமென யானை முகக் கணநாதனை, வேண்டி நின்ற அருந்தமிழைத் தாய்ப் பாஷையாகக் கொண்டு பர்மா நாட்டின் கண்ணும் மலேயா, சிலோன், ஏனைய நாட்டின் கண்ணும், வாழ்ந்துவரும் எனது "தமிழ்" நாட்டுச் சகோதரிகளே! வீர மாதர் நிறைந்திருந்த இந்தியாவில் ஜனித்த வீரஞ்செறிந்த வனிதா ரத்னங்களே!! காலச் சக்கரம் அதிவேகமாய்ச் சுழன்றுகொண்டு வருகிறது. அச்சுழல் வேகத்தினால் இப்பிரபஞ்சத்தில், நிமிஷத்துக்கு நிமிஷம் எண்ணற்ற பல மாறுதல்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. உலகத்திலுள்ள ஒவ்வொரு நாடும், சமூகங்களும் தங்களுடைய லக்ஷியத்தைக் காப்பாற்றவும், தங்களின் பிறப்புரிமையாகிய சுதந்தரத்தை நிலைநிறுத்தவும் பல கலைகளிலும் முன்னேறி வரவும் மிகவும் பாடு படுகின்றன.

அந்தோ! நம்நாட்டு நிலைமையை நினைக்கையில் வெட்கித் தலை குனிய வேண்டியிருக்கிறது. மேல் நாட்டில் பெண் உலகு எவ்வளவு முன்னேற்றமடைந்து கொண்டிருக்கிறதென்பதை உற்றுப் பாருங்கள். எந்த நாடும், எந்த இயக்கமும், சீர்திருத்தமும்,

பெண்களினுலே வெற்றிபெற முடியும் என்பதை, உங்கள் உள்ளத்தில் புகுத்தி, நமது தாய் நாட்டிற்கு உழைபுங்கள். குறிப்பாக துருக்கி சில ஆண்டுகளுக்கு முன், எவ்வித நிலையிலிருந்தது? ஆனல் இன்று அத்துருக்கி தேசம் எவ்வளவு உன்னத சீர்திருத்தமடைந்துவிட்டது? இது யாரால்? முன் மூலை முடுக்குகளிலிருந்து பாட்டி கதைகளைப் பாடிக்கொண்டிருந்த பெண்களை துருக்கி சர்வாதிகாரி காஜி முஸ்தபா கமால்பாஷா அறை வீட்டினின்று வெளிப்படுத்தி, பெண்ணுக்கு வேண்டிய சகல சுதந்திரங்களையும் அவர்களுக்கு வழங்கினுர். துருக்கிப் பெண்மணிகளும் ஊக்கத்துடன் ஆண்களுடன் சரிநிகர் சமானமாக, படிப்படியாக எல்லாத் துறைகளிலும் முன்னேறி இப்பொழுது சுதந்தரதேவியராக தமது தாய் நாட்டுக் கைங்கர்யத்தி லீடுபட்டிருக்கின்றனர். இன்னும் இன்று செல்வாக்கடைந்துள்ள ஜப்பான் முன்னேற்றமடைந்தது பெண் வர்க்கத்தினர்களினு லல்லவோ?

அன்னை பாரத மாதாவின், மணி வயிற்றில் அவதரித்த இந்தியப் பெண்ணிளஞ் சிங்கங்களே! கற்பனு சக்தி கைக்கொண்ட வனிதா ரத்னங்களே!! ஆதியில் அஞ்ஞான மென்னும் காரிருளில் சிக்குண்டு நாகரிகம் என்பதையே கனவிலும் நனவிலும் அறியாதிருந்து காட்டிலும், மேட்டிலும் மலைக் குகைகளிலும், புதர்களிலும் கோழி உரோமங்களையும், மரமட்டைகளையும் ஆடையாக அணிந்து வனவிலங்கினங்களைப் போல மேல் நாட்டினர் ஆரண்யங்களில் வாழ்ந்து கொண்டிருக்குங்கால், நம் பாரத நாட்டினர் நம் மூதாதையர்கள், நாகரீக முதிர்ச்சியிலும் கல்விப் பெருக்கிலும், செல்வத்திலும் வியாபாரம், கைத்தொழில்களிலும், இன்னும் பல துறைகளிலும், செழித்தோங்கி என்றும் அழியாப் பெரும்புகழ் பெற்றிருந்தனர். அத்தகைய விவேக மக்களைப் பெற்றெடுத்த நம் நாடு மண்ணெல்லாம் பொன்னுக விளைந்த பூமி. செல்வம் கொழித்த திருநாடு. சித்தர்கள் பலர் திகழ்ந்த புண்ணிய தேசம், வீரம் செறிந்த ஜான்ஸி லெக்ஷ்மி மகாராணி அவதரித்த நம் தாய்நாடு, ஜாதி மத பேதமின்றி சகோதரப் பான்மையுடன் வாழ்ந்துவந்த பாரத தேசம், இதுகால் ஒரு பேராசையுள்ள அந்நிய நாட்டினரின் கீழ் பிணிக்கப்

பெற்று, வகுப்பு வேற்றுமையினலும், இன்னும் அநேக காரியங்களினலும் சண்டை சச்சரவு உண்டாக, நம்பாரத நாட்டுமக்கள் ஒற்றுமை குலேந்து நிற்க, நெஞ்சிலுரமின்றி வீண் வாய்வேதாந்தம் பேசித் திரிகின்றனர். அந்நியர்களின் ஆட்சி வலுக்கின்றது. இதனுல் நமது தாயின் அடிமை விலங்கு, மிகவும் வலுவடைந்து கொண்டிருப்பதைச் சிறிது சிந்தியுங்கள். முற்காலத்தில் அத்துணை முன்னேற்றமடைந்து பழம்பெருமை பெற்றிருந்த நம் நாடு இதுகால் எவ்வளவு க்ஷீணதிசை யடைந்திருக்கிற தென்பதை உற்று நோக்குங்கள்!

அந்தோ! உடுத்த நான்கு முழ ஆடைக்கும், கால்வயிற்றுக் கஞ்சிக்கும் வழியின்றி நம் இந்திய ஏழைமக்கள் வறுமை என்னும் கொடிய நோய் வாய்ப்பட்டு ஒட்டிய வயிற்றுடனும், வாடிய முகத்துடனும் வருந்தி, பசியின் கொடுமை தாங்காது வருஷத்திற்கு எத்தனேயோ இந்திய மக்கள் எமனுக்கு இரையாகி வருகின்றனர். அதன் காரணம் என்ன? கவனித்தீர்களா? ஏனைய மேல் நாடுகள் அடைந்து வரும் அபிவிருத்திகளேச் சற்று கவனியுங்கள். இன்று கல்விப் பெருக்கிலும், கைத்தொழில் வியாபாரத்திலும், செழிப்படைந்து முன்னேறி வந்து கொண்டிருக்கும் ஜப்பானே நோக்கிப் பாருங்கள். உலகெங்கு முள்ள பல நாடுகளும், சுதந்திரதாக மெடுத்து தன் தன் நாட்டிற்குழைத்து வெற்றிகைக் கொண்டு வெற்றிச் சங்கூத, செல்வஞ் செழித்தோங்கி ஆனந்தபரவசத்தில் மூழ்கிக் கொண்டிருக்கையில், துரதிர்ஷ்டமுள்ள நம் பாரதத்தாய் அடிமை என்னும் ஆழக்குழியில் விழுந்து கண்ணீர் வடித்துக் கொண்டிருப்பதைப் பார்க்க உங்கள் மனம் இரங்கவில்லேயா? இதை நினேக்கையில் உங்களின் உரோமங்கள் சிலிர்க்க வில்லேயா? அங்கம் துடிக்கவில்லேயா? இந்திய வீரமண்ணில் ஜெனித்த ஜான்ஸி மகாராணியை அன்று ஒரு இளஞ்சிங்கக் குட்டியைப் போல யுத்தகளத்தில் வீறிட்டெழச் செய்த வீர இந்திய ரத்தம் உங்கள் நரம்புக் குழாய்களில் பீறிட்டுப் பாயவில்லேயா? உங்களுக்கு சுதந்திர தாகமெடுக்க வில்லேயா? இப்பொழுது நீங்கள் யாது செய்யப்போகிறீர்கள்? இதற்கு விமோசனம் யாது? முதலில் ஆண்மக்களுடன், பெண்மக்களும் சரிநிகர் சமானமாக

வாழ முயற்சி செய்யுங்கள். ஆண்களுக்குள்ள சுதந்திரத்தைப் போல நீங்களும் சகல சுதந்திரங்களைப் பெறவழி கோலுங்கள். உங்களின் முயற்சி வீண்போகாது. வெற்றிபெறுவது நிச்சயம். உங்கள் இந்தியப் பெண்ணுலகு முன்னேற்றமடைய அன்னைபரா சக்தியின் அருளை வேண்டுங்கள். நம் இந்தியத் தாயகம் விடுதலை யடைய நீங்கள் ஒவ்வொருவரும் கங்கணம் கட்டிக்கொள்ளுங் கள். விடுதலை மந்திரமே உங்களுக்கு விடுதலையளிக்க வல்லது. உங்கள் இந்தியப் பெண்ணுலக விடுதலைக்கும், நம் பாரத நாட் டின் விடுதலைக்கும், முட்டுக்கட்டையாகத் தடுத்து நிற்கும் சாஸ் திரக் குப்பையையும் ஜாதிமத பேதத் தளையையும் அறவே அறுத் துத் தள்ளி இந்து, முஸ்லீம், கிருஸ்து, என்ற பாகுபாடின்றி யாவரும் ஓர் தாயின் பிள்ளை, ஓர்குலம், நாம் யாவரும் இந்தியமக் கள் எனீறெண்ணி நம் இந்தியத் தாயின் விடுதலை கோரி நில்லுங் கள். ஜாதிமதபேதங்கள் நம் நாட்டில் தாண்டவமாடிக் கொண் டிருப்பின் நம் அன்னையின் அடிமை விலங்கு வலுவடைந்து வரும். அந்நியரின் ஆட்சி பலமடையும். ஆகையால் சமத்துவம் சகோ தரத்வம், சுதந்திரம், என்பவற்றையே சதாகாலமும், உங்கள் உள் ளத்தில் புகுத்தி ஒன்றுபட்டு வாழும் இந்திய மக்களின் நன்னாளை எதிர்நோக்குங்கள்.

அறிவிற் சிறந்து விளங்கும் பெண்மணிகளே, தமிழன்னை யின் அருந்தவப் புதல்விகளே!! நம் நாட்டு வறுமையையும், சிறு மையையும் ஒழித்து அன்னை பாரதமாதாவின் அடிமைச் சங்கி லியை முறித்தெறிந்து, ஏழை இந்திய விதவை மக்களின் இரதக் கண்ணீரைத் தடுத்து பண்டைய இந்தியப்பெரும்புகழை நிலைநிறுத் தவேண்டுவதற்கென அஹிம்சை வீரன் உலகம் போற்றும் உத்தம தியாகி, இந்திய ஏழை மக்களின் வறுமையைக் களைய வந்துதித்த தர்மசீலன், தேசத்தொண்டே தனது தெய்வத்தொண்டென மதித்து அவதரித்துள்ள பெருமான் காந்தியடிகள், நம் நாட்டு மக்களின் அஞ்ஞானக் காரிருளைப்போக்கி ஜீவ சஞ்சீவியாக விருக்கும் புண்ணிய நாட்டின் ஆதரவுகொண்டு நம்நாட்டுப் பசிப் பிணியாளர்க்கு உணவு கொடுத்து மக்களுக்கு சுதந்திரதாகத்தை உண்டாக்கி சுயராஜ்யம் என்னும் அரும்பொருளை நம் நாட்டிற்

குள் நிலை நிறுத்திவைக்கவும் ஐயன் காந்தி முனிவர் அரும்பாடு பட்டு வருகிறார். இன்னும் சரோஜினி, கமலா நேரு, கமலா தேவி முதலிய பெண்ணரசிகளும் தங்கள் தாய்நாடு பூர்ண சுதந்திரம் அடைய, உடல், பொருள், ஆவி யாவையும் தியாகம் செய்துள்ளார்கள். அதற்கெனப் பல பெரியார்கள் ஐம்பத்தோராண்டுகளுக்கு முன், ஒரு மகாசபையையும் ஏற்படுத்திவைத்தார்கள். அப் பொது ஜன மகாசபையும் மதபேதமின்றி இந்திய மக்களுக்கெனப் பாடுபட்டு வருகின்றது.

அன்று அப்பெரியார்கள் ஏற்படுத்திவைத்த பொதுஜன சபையே இன்று காங்கிரஸ் என்னும் திருநாமம் உலகெங்கும் ஒலிக்கும்படி விளங்கி வருகிறது. சகோதரிகளே! நம் நாட்டு நலன் கருதி உழைக்கும் அத்திருச்சபையின் கோரிக்கை சித்தி பெற நீங்கள் அன்னை பராசக்தியின் அருளைவேண்டி நிற்பதுடன் நீங்களும் நம் தாய் நாட்டு விடுதலைக்கு உழைக்க முன்வருவீர்களாக.

தேசத்தொண்டில் சிறந்து விளங்கி வரும் எனது தாய் நாட்டுச் சகோதரிகளே! 1926ம் ஆண்டில் பாரிஸில் நடைபெற்ற சர்வதேச ஸ்திரீகள் மகாநாட்டிற்கு நம திந்தியாவின் பிரதிநிதியாகச் சென்றவரும், 1930ம் ஆண்டில் நடந்த உப்புச்சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு தன் தாய் நாட்டிற்கெனச் சிறைக்கூடம் சென்றவரும், இன்று தினம் மங்களம் நிறைந்த மாபெரும் தலைவர்களைக்கொண்ட புனித காங்கிரஸ் மகாசபையின் சென்னை மாகாண அசெம்பளி உபதலைவராகவும் இருந்துவரும், அம்மை ருக்குமணி லெட்சுமிபதி அவர்கள். அன்று உப்புச் சத்தியாக்கிரகத்தில் பெண் தொண்டர்களுக்குத் தலைவியாக நின்ற கல்விப் பெருக்குள்ள தாய் சரோஜினிதேவி, தேசத்தொண்டே தெய்வத் தொண்டாக எண்ணியும் சிறைக்கூடமே தவப் பொற்கூடமாக ஏற்று ஆவி துறந்த அன்னை கமலா நேருவைப்போலவும், நீங்கள் தேசத்திற்குழையுங்கள். மூடப்பழக்கமும் குருட்டு நம்பிக்கையும் கொண்டுள்ள வைதீகப் பித்தர்களின் பேச்சுக்குட்பட்டு வீட்டின் மூலையிலிருந்து அடுப்பூதும் தொழிலைக் கற்றுக்கொண்டு வாளாவிராது, மேல் நாட்டுப் பெண்களைப்போல் நீங்களும் ஆண்களு

டன் சரிநிகர் சமானமாக வாழ வழி தேடுங்கள். தம் தாய்நாட்டு விடுதலை கோரி நிற்பதுடன் உங்கள் 'மாதர் விடுதலைக்கும் உழைத்து ஆதியில் நமது தேசத்து ஆடைகளின்மேல் ஆசை கொண்டு வாங்கியுடுத்திய அநாகரீக் அயல் நாட்டினருடைய ஆடைகளின்மேல் ஆசையுறாது அந்நிய நாட்டுச் சாமான்களை அறவே ஒழிக்கக் கங்கணம் கட்டி நமது தேசத்து கைத் தொழிலை விருத்தி செய்து நம் நாட்டு மக்களின் பசிப்பிணியகற்றி வரும் தெய்வக் கதருடையையே ஆதரிக்க வேணுமாய் உங்களை மிகவும் பணிந்து கேட்டுக்கொள்ளுகின்றேன்.

எனது தமிழ்நாட்டுப் பெண்ணிளஞ் சிங்கங்களே! சுவாமி விவேகானந்தர் கூறியதுபோல் எழுமின்! விழுமின்! கருதிய கருமம் கைகூடும் வரைச்சலியா துழைமின்!

பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனிசிறந்தனவே!

மனம்போல மாங்கல்யம்

[த. ரா.]

இரவு மணி இரண்டு. மார்கழி மாதம் கடைசி நாள். பனி கொட்டிக்கொண்டிருந்தது. அடிக்கடி ஜில்லிட்டு வீசியது கொடுங் காற்று.

செங்கோட்டை ரயில்வே ஸ்டேஷன் என்றையும் போல் அவ்வளவு கலகலப்பாக இல்லை. சுமார் பத்துப் பதினைந்து பிரயாணிகள் அங்கவஸ்திரத்தால் முக்காடு போட்டு மூடிக்கொண்டு குந்தி இருந்தனர். ஒரு சிலர் பீடித் துண்டுகளை அபயம் அடைந்து தாங்க முடியாத குளிரோடு போராடிக் கொண்டிருந்தனர்.

வானம் நிர்மலமாக இல்லாவிட்டாலும் மழையின் லக்ஷணங்கள் ஒன்றும் தென்படவில்லை. மேகப் படலங்கள் ஆங்காங்கு பறந்து சென்று கொண்டிருந்தன.

"டிங் ணிங் ணிங்........" மூன்றாவது மணியும் அடித்து விட்டது. இரண்டு நிமிஷம் கழிந்ததும் ஒரு பேரிரைச்சல். புயல் காற்று வருவது போல் ஒரு அரவம். திருவனந்தபுரத்திலிருந்து மெயில் ஏற்றிக்கொண்டு வரும் ரயில்வண்டி வந்து நின்றது.

ஃ ஃ ஃ

அவளுக்கு சுமார் பதினெட்டு வயதிருக்கும். அழகி யல்லாவிட்டாலும் யௌவன தசையின் ஆர்ப்பரிப்பு அவளுடைய ஒவ்வோர் அங்கத்திலும் ததும்பிக்கொண்டிருந்தது. ஒரு கையில் 'கூஸாவும்' மறு கரத்தில் ஒரு சிறு 'டிரங்க் பெட்டி'யுமாக அவள் 'பிளாட்டு பாரத்தில்' நடக்கலானாள். எல்லா திசையிலும் அவள் கண்கள் மோதி நிராசையோடு பின்வாங்கின. அவள் எதிர்பார்த்தவர் அங்கு வரவில்லை. அந்த நள்ளிரவில் துணையின்றித் தவிக்க நேரிடும் என்ற துயரப்பெருக்கில் அவள் மனம் குழம்பி ஒரு மூலையில் உட்கார்ந்துவிட்டாள்.

"டிக்கட்டு!"

ஸ்டேஷன் மாஸ்டரின் கைராந்தலின் வெளிச்சம் அந்தக் கவலை நிறைந்த முகத்தில் விழுந்தது. அவள் தடுமாறி எழுந்தாள். மறுகணம் இடுப்பில் கைபோட்டு டிக்கட்டை எடுத்து நீட்டினாள். ஸ்டேஷன் மாஸ்டர் அந்த டிக்கட்டை வாங்கவும் அவள் பாம்பைக்கண்டு நடுங்குவது போல் திடுக்கிட்டுப் பின் வாங்கினாள். டிக்கட்டு வாங்கும் போது அவர் அவள் கரத்தை ஸ்பர்சித்திருக்க வேண்டும். ஸ்டேஷன் மாஸ்டர் அவளை ஒரு "தினுஸாக"ப் பார்த்து விட்டுச் சென்று விட்டார்.

ஃ ஃ ஃ

அவள் உடல் பதறிக் கொண்டிருந்தது. கால்கள் நடுங்கிக் கொண்டிருந்தன. இந்தப் பொல்லாத உலகத்தின் கொடுமைகளைச் சிந்தித்துப் பெருமூச் செறிந்தாள். அந்த நிலைமையில் இனியும் சும்மா பார்த்துக் கொண்டு நிற்பது சரியல்லவென்று எண்ணி இரும்புக் கம்பிகளைத் தாண்டி நான் அவள் அருகில் சென்றேன். என்னைக் கண்டதும் மறுபடியும் மருண்டு எழுந்தாள்.

"பயப்பட வேண்டாம்."

அவள் ஒரு முறை என்னை நோக்கி விட்டுத் தலையை குனிந்துகொண்டாள்.

"உலகம் பலவிதம்."

எனது கருத்தை உணர்ந்தவள் போல் மீண்டுமொரு முறை என்னை நோக்கிவிட்டுப் பெரு மூச்செறிந்தாள்.

"எனக்குத் தெரியும் அந்த ஸ்டேஷன் மாஸ்டர்.... ...."

இயந்திரப்பாவை போல் அவள் 'கூஸா'வையும் பெட்டியையும் தூக்கினாள்.

"இங்கிருந்து தப்ப முடியாது. கேட்டு பூட்டி அரைமணி நேரம் ஆயுடுத்து"

என்ன செய்ய வேண்டுமென்று தோன்றாமல் அவள் தத் தளித்தாள். பரிதாபத்தோடு என்னை நோக்கினாள்.

"அதோ வேலையாள் வருகிறான். பயப்பட வேண்டாம். நான் பக்கத்திலே இருப்பேன்" என்று அவளை சமாதானப் படுத்திவிட்டு சுவர் மறைவில் பதுங்கினேன்.

ஃ ஃ ஃ

"எம்மா நிக்கிறே, ஐயா அளைச்சிட்டு படுக்கவைக்கச் சொன் னாரு. பொழுது விடிஞ்சதும் பூயுடலாம்."

அந்தக் குரல் எனக்குப் பழக்கம் உள்ளது போல் தோன் றிற்று. ஆனால் அதொரு கணம் தான்.

"நீ உன் வேலையைப் பாரு நான் வல்லை."

"ஐயா தங்கமான மனிசன். அவர் தயவு கிடைக்கக் கொடுத்து வைக்கணும். உம்! எந்திச்சு வான்னு."

ஒரு வேளை அந்த வேலையாள் முரட்டுத்தனத்துக்கும் அஞ்ச மாட்டான் என்று நினைத்து அங்கு சென்றேன். என்னைக் கண்ட தும் அவன் திடுக்கிட்டுப் பின் வாங்கினான். என்னிடம் கொஞ்சம் நாள் வேலை பார்த்த ராமன் அவன்!

"ராமா!"

அவன் பேசவில்லை. குனிந்த தலை நிமிராமல் இருந்தான்.

"பெண் வேட்டையும் ஆரம்பித்துவிட்டாயா? உம்! எசமா னுக்கு ஏற்ற சேவகனல்லவா? அப்படித்தான் இருக்கணும்."

"சாமி! மன்னிக்கணுங்க. உங்க ஆளுனு எனக்குத் தெரிஞ்சா............."

"எனது ஆள் வேறு பிறத்தியார் வேறு அல்லவா! நல்ல நியாயம்....... சரி! அதிருக்கட்டும். கேட் சாவி உங்கிட்டதானே?"

"இதோ இருக்குதுங்க......."

"நாங்கள் சீக்கிரம் வெளியேறணும்"

மறு வார்த்தை பேசாமல் ராமன் கேட்டைத் திறந்து எங்களை அனுப்பினன்.

ஸ்டேஷன் எல்லையை விட்டு நகர்ந்தோம். அந்த சமயத்தில் அவளோடு எப்படிப் பேசவேண்டும், என்ன பேசவேண்டுமென்று எனக்குத் தோன்றவில்லை. பத்தடி சென்றதும் தான் அவள் எங்கு போக வேண்டியவள் என்று விசாரிக்க மனம் தூண்டிற்று.

"எங்கே போகணும்?"

"எனக்குத் தெரியாது!"

"உனக்குத் தெரியாதா!"

"ஊம்!"

"இந்த ஊருக்குப் புதுசா?"

"உம்"

திடீரென்று அவள் நடப்பதை நிறுத்தி விட்டுத் திருவனந்தபுரத்துக்கு வண்டி எப்போ?" என்று கேட்டாள்.

"என், திரும்ப உத்தேசமா?"

"உம்! இந்த ஊர் பொல்லாத ஊர்......." அவள் உடல் பதறிற்று; ஸ்டேஷன் மாஸ்டரின் நடத்தை ஞாபகத்துக்கு வந்திருக்கலாம்.

"தெரிந்தும் தனிமையா வரலாமா?"

"உண்மை தான். ரயிலில் ஜனங்களை நம்பிவந்தேன். ஸ்டேஷனில் ஆள்வந்து காத்திருப்பான்னு நினைச்சுப் புறப்பட்டேன்—ஆனல்...."

"ஆனால் யாரும் வரவில்லை, என்ன? அது கிடக்கட்டும் உனக்கு எங்கே போகணும்?"

"குற்றாலத்துக்கு; மிராசுதார் சோமசுந்தர ஐயர் வீட்டுக்கு"

என்னை யறியாமலே நான் நடுங்கிவிட்டேன். மிராசுதார் சோமசுந்தர ஐயர் எனது தகப்பனார்!

ஃ ஃ ஃ

இருள் எனக்கு அனுகூலமாயிருந்தது. நான் திடுக்கிட்டதை அவள் கண்டு கொள்ளவில்லை. அந்த நாடகத்தின் முடிவைக் காணும் பொருட்டு நான் என்னைக் காட்டிக்கொடுக்காமல் இருந்தேன்.

"சோமசுந்தர ஐயர் வீடு வெகு தொலையில் என்னா இருக்கு; சுமார் ஆறு மைல் இருக்கும், உனக்கு நடக்க முடியுமா?"

"நடக்கிறதைப்பற்றி கஷ்டம் இல்லை. ஆனால்............" அவள் வெட்கித் தலை குனிந்தாள். அந்த வெட்கத்தின் கருத்தை உணர்ந்தேன் நான்.

"நீ சந்தேகிப்பது இயற்கை. ஆனால் வேறு மார்க்கமில்லையே. நானும்...........உனக்கு...........புதுசா...........?"

அவள் இடைமறித்தாள்.

"இல்லை. உங்களை நம்பறேன்."

அந்த சமயத்தில் அவளை என்னில் நம்பிக்கை வைக்கத் தூண்டிய சக்தி இன்னது என்று எனக்குப் புரியவில்லை. மெதுவாக நடக்கலானோம்.

வழியில் நடத்தையின் சிரமத்தை யறியாமல் நாங்கள் பேசிக்கொண்டு சென்றோம். மின் மினிகளின் பிரகாசத்தைத் தவிர பாதையில் வேறு வெளிச்சம் ஒன்றுமில்லை. பாதையின் இரு புறங்களிலுமுள்ள வயல்களிலிருந்து கிளம்பிய தவளைகளின் பயங்கரக் கூச்சல் செவிகளை பிய்த்துக்கொண்டிருந்தது. பாதை ஓரமாக வளர்ந்து நின்ற மூங்கில் மரங்களை சலசலக்க வைத்துக

கொண்டு கொடுங் குளிர்காற்று வீசி எங்களை அடிக்கடி நடுங்கும் படி செய்து கொண்டிருந்தது. மூடு பனியை கிழித்துக்கொண்டு நாங்கள் மெதுவாக நடந்துகொண்டிருந்தோம்.

ஃ ஃ ஃ

"ஒரு சிநேகிதன் திருவனந்தபுரத்திலிருந்து வருவதாக எழுதியிருந்தான். அதுக்காக ரயில் அடியில் காத்திருந்தேன். ஆனல் அவன் வரவில்லை. கார்கொண்டு வரும்படி ட்ரைவரிடம் சொல்லியிருந்தேன். அதுவும் வந்த பாடில்லை. ஏதாவது 'ரிப்பேர்' ஆயிருக்கும்" என்று நான் ரயில் அடிக்கு வர நேர்ந்த காரணத்தை விளக்கிக் கூறினேன். அவள் பதில் சொல்லாமல் கேட்டுக்கொண்டு நடந்தாள்.

"சோமசுந்தர ஐயர் வீட்டுக்கு என்ன வேலையாப் போகிருய்?"

அவள் ஒரு கனைப்பு கனைத்துவிட்டுப் பதில் சொன்ஞள்:

"சமையல் பண்ண ஆள் தேவைனு விளம்பரம் செய்திருந்தா அதைப் பார்த்ததும் எழுதினேன். வரும்படி பதில் வந்தது மெயிலுக்கு புறப்பட்டு வறதாகவும், ஸ்டேஷனுக்கு ஆள் விடணும்னும் சொல்லி எழுதியிருந்தேன். ஆனல்..........."

"ஒரு வேளை தென்காசிக்கு ஆள்விட்டிருந்தாலும் விட்டிருக்கலாம். அங்கிருந்து குற்ருலம் போவது தான் குறுக்குப் பாதை."

"அப்படியானல் உங்க சிநேகிதரும் தென்காசி மார்க்கமாப் போகலாமே."

"தென்காசிக்கும் ஆள் விட்டிருக்கேன்; ஆனல் அவன் இந்த வண்டியில் வரவில்லை.

ஃ ஃ ஃ

இருளை வென்றுகொண்டு நடந்தோம். சுமார் முக்கால் மைல் நடந்ததும், தொலையிலிருந்து வரும் கார் விளக்குகளின் ஒளி, மூடு பனியைக் கிழித்துக் கொண்டு எங்களை எதிர்நோக்கி வந்தது. அந்த வெளிச்சம் அடிக்கடி விருக்ஷக் கூட்டங்களில் மறைவதும் மறுகணம் பிரகாசிப்பதும் என் உள்ளத்தில் ஒருவகை சஞ்சலத்தை உண்டாக்கிற்று.

"இனி நடக்க வேண்டாம் என்றேன் நான்.

"என்?"

"அதோ கார் வரது"

"அது யார் காரோ"

"அது என் காராயிருக்கணும் அதில் போகலாம்" திடீ ரென்று காரின் விளக்கொளி அவள் முகத்தில் விழுந்தது; அவள் கண்கள் ஆச்சரியத்தால் விரிந்திருந்தன.

இரண்டு நிமிஷம் கழிந்ததும் கார் எங்கள் பக்கம் வந்து சில ஈன குரல்களைக் கிளப்பிவிட்டு நின்றது. மறுகணம் ட்ரைவர் கீழே குதித்தான்.

ஃ ஃ ஃ

"என்னடா இது, என் இவ்வளவு தாமதம்?"

"தென்காசிக்குப் போயுட்டு வாறேன். எசமான் அங்கிருப்பீ கணு நெனச்சேன். அங்கேதானே முன்னுடி கொணுந்து விட் டேன்.

"டிரைவரை அங்கு நிறுத்திவிட்டு நான் ரயிலில் இங்கு வந் தேன், சரி............"

நாங்கள் இருவரும் காரில் ஏற, கார் அதிவேகமாகப் பறந் தது. என் கூட வந்த யுவதியைக் கண்டு டிரைவர் ஆச்சரியப்பட் டான். ஆனலும் அதை அவ்வளவு வெளிக் காட்டவில்லை.

ஃ ஃ ஃ

அன்றைய இரவின் சம்பவங்கள் காலத்திரையில் மறைந்து நாட்கள் பல ஆயின. அந்த நாள் இரவிலே என் உள்ளத்தைக் கவர்ந்த அந்தப் பெண் இன்னும் எங்கள் வீட்டில் சமையல்காரியா கத்தான் இருக்கிருள். அந்தப் பொல்லாத இரவில் உதவியளித்தது, அவள் யாரை நாடி வந்தாளோ அவரின் புதல்வன் என்று அறிந்த தால் உண்டான ஆச்சரியம் நாளடைவில் மறைந்தது. தினமும் நான் அவளைப் பன்முறை சந்தித்து வந்தேன். என் தாய்க்குச் சகா யமாக அவள் அடக்க ஒடுக்கத்தோடு நடந்துகொண்டாள்;

எதற்கு, ஒரு வேலைக்காரி என்ற நிலைமையிலிருந்து அவள் எங்கள் குடும்பத்தில் ஒருவளாக மதிக்கப்பட்டாள்.

ஒருநாள் சாயங்காலம், நான் வீட்டுக் கேணியருகில் கால் அலம்பிக்கொண்டிருந்தேன். அவள் அங்கே பாத்திரம் துலக்கிக் கொண்டிருந்தாள். என் தாய் அகத்துக்குள் ஏதோ வேலையில் ஈடு பட்டிருந்தாள்.

"என்ன, வீடு பிடித்தமாயிருக்கா?" என்றேன் நான். நாங்கள் சகஜமாயுள்ள வெட்கத்தைத் தாண்டி வெகுதூரம்சென்றிருந்தோம்.

"நீங்க எல்லாம் இருக்கிறச்சே என்ன குறை"?
ஒருவகைத் திருப்தி அந்தக் குரலில் தொனித்தது.

நான் ஒரு கணம் சும்மா இருந்துவிட்டு, திடீரென்று "ஒரு விஷயம் ரொம்ப நாளா கேட்கணும்னெனச்சேன்; நீ கோச்சுக்காமல் பதில் சொல்வாயா?" என்று கேட்டேன்.

அவள் ஒரு கணம் யோசித்துவிட்டு,

"உம்!" என்று முனகினள்.

"உனக்குக் கல்யாணத் ஆயுடுத்தோ?"

அவள் முகம் திடீரென்று வாடிற்று. பெரு மூச்சுவிட்டு நிமிர்ந்தாள்.

"உம்!" என்ற பதில் என் காதில் விழுந்தது.

ஏனே. அந்த "உம்!" மை என் உள்ளம் விரும்பவில்லை.

"அகமுடையான் எங்கே?"

அசட்டுத்தனமான கேள்விதான். ஆனல் அதைக் கேட்கா மல் இருக்க என்னல் முடியவில்லை.

அவள் கொஞ்சம் நேரம் பதில் கூருமல் இருந்தாள். தற் செயலாக நான் அவள் முகத்தைப் பார்த்தேன். சோகம் வழிந்து கொண்டிருந்தது அந்த வதனத்தில்.

"ஏன் வருத்தப்படருய்? அவர் உன்னைவிட்டுப் போய்விட் டாரா?"

"உம்! இந்தப் பாவியை விட்டுட்டு என்னிக்குமா போயுட்டா."

"என்ன! நீ விதவையா!! இந்த இளம் வயதில்!!" மடமடவென்று கண்ணீர் பெருகி பதிலளித்தது.

அவள் கண்ணீரில் என் மனம் கரைந்தது. நான் மெதுவாகக் கையை நீட்டி அவள் கண்களைத் துடைக்க முயன்றேன். அவள் திடுக்கிட்டுப் பின் வாங்கினாள்.

"உம்!" என்ற அவளுடைய உறுமல் என் ஸப்த நாடிகளையும் ஸ்தம்பிக்கச் செய்துவிட்டது. அவள் கண்களில் அப்போது மின்னிய ஒளியின் சக்தியில் நான் எரிந்து விடுவேனோவென்று அஞ்சினேன். அப்பா! என்ன பயங்கரமான பார்வை!

ஃ ஃ ஃ

அன்றிரவு நான் தூங்கவில்லை. அடிக்கடி கவலை நிறைந்த அப்பெண்ணின் வடிவம் தோன்றி அலட்டிக்கொண்டிருந்தது. அவள் என் என்னை அருகில் அணுகவொட்டாமல் கண்களால் அதட்ட வேண்டும்? என் உறுமி பின் வாங்கினாய்? எனக்கு ஒன்றும் புரியவில்லை. அவள் என்னை வெறுக்கிறாளா? நான் அவள் மீது அனுதாபம் கொண்டது உண்மை. ஆனால்........ஆனால்........அனுதாபம் அனுராகமாக முடியக் கூடுமென்று நான் நினைக்கவில்லை. ஆனால் இப்போது எனதுள்ளத்தை அலசிப் பார்க்குமிடத்து, நான் அவளிடம் காதல் கொண்டு விட்டதாக உணருகிறேன். ஆமாம் காதல் தான். கவிகளின் கற்பனையில் நடனமாடும் உண்மைக்காதல். அவளை அடையும் பாக்கியம் எனக்குண்டா என்பது சந்தேகம். யார் கண்டா விதியின் போக்கை.... இரவு மணி இரண்டானதும் நித்திராதேவி கனிந்து அனுக்கிரகித்தாள்.

ஃ ஃ ஃ

மறுநாள் அவள் முகத்தைப் பார்க்க என்மனம் துணியவில்லை. ஆனால் கபடமாக என் கண்கள் அடிக்கடி அவள் பக்கம் சென்று கொண்டிருந்தன. இந்தக் கபட நாடகத்தை ஒருமுறை அவள் கண்டு கொண்டு விட்டாள். ஒரு குறும்புச் சிரிப்பு அவள் இதழ்களில் தோன்றி திடீரென்று மறைந்தது. அதன் கருத்து என்ன?

கண்களால் விரட்டியவள் இதழ்களால் வரவேற்கிறாளா? அல்லது ஒரு இரவுக்குள் அவள் மனநிலைமை மாறியிருக்கக் கூடுமா? அதைப்பற்றிச் சிந்திக்கச் சிந்திக்க என் மூளை குழம்பிற்று.

சற்று நேரம் நடந்து காற்று வாங்கலாமென்று நினைத்து எங்கள் பங்களா தோட்டத்துக்குள் நுழைந்தேன். என்ன வெல்லாமோ சிந்தித்துக் கொண்டு மெய்மறந்து நடந்துகொண்டிருந்தேன். திடீரென்று யாரோ விம்மி அழும் சப்தம் கேட்டது. அந்த சமயத்தில் அங்கு அழுபவர் யார்? நான் விரைந்து அழுகைவரும் திசையை நோக்கிச் சென்றேன். ஒரு மாமரத்தடியில் அவள் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தாள்.

ஃ ஃ ஃ

"எச்சுமு!"

அவள் திடுக்கிட்டுத் தலை நிமிர்ந்தாள். என்னைக் கண்டதும் வெகுண்டு எழுந்தாள்.

"எச்சுமு! ஏன் அழறே?

கோபமும் சோகமும் அவள் முகத்தில் மாறி மாறித் தோன்றிக்கொண்டிருந்தன. அதொரு தனியழகு!

"அந்தமாதிரி அழைக்காதேங்கோ. அவர் மட்டும்தான்........" வார்த்தைகள் அவள் நாவிலே மடிந்துவிட்டன.

"போனவாளைப் பற்றி வருத்தப்பட்டு என்ன பிரயோசனம்? நடக்கவேண்டியதைப் பாரு"

அவள் பதில் பேசவில்லை.

"என்னைக் கல்யாணம் பண்ணிக்கோ. உன்பேரிலே எனக்கு..............."

"உம்! என்ன வார்த்தை?

அவள் என்னை இடைமறித்தாள். கோபத்தால் அவள் முகம் கோணுவதை நோக்கி ஒரு கணம் மெய்மறந்து நின்றுவிட்டேன்.

"அதிருக்கட்டும், நீ கைம்பெண் என்று அப்பா அம்மாவுக்குத் தெரியுமா?"

"உம்! என்று பதில் வந்தது.

"சரி! நான் கொடுத்து வைத்தது அவ்வளவுதான்." என் குரல் நிராசையால் கனம் குறைந்து வரண்டிருந்தது. அவள் திடீரென்று சொன்னாள்: என்னை மறந்திடுங்கோ. இல்லாவிட்டால் பாபம்"

"நான் பாபியாகவும் தயார்"

"ஐயோ! என்ன இது".

"நான் என்ன செய்றது. உன்னை சந்தித்த முதற் கொண்டு மன வேதனைதான்".

"அப்படியானால் நான் இங்கிருந்து போயுடறேன்"

"உம்!"

"அல்லாமே வழி? உங்களுக்கு மனவேதனையை உண்டாக்கிண்டு நான் இங்கிருக்க முடியுமா?"

"அதுக்கு நல்ல வழி இருக்கே?"

"என்ன வழியோ?"

"என்னைக் கல்யாணம் பண்ணிண்டுடு."

"முடியாது, முடியவே முடியாது"

"என்?"

"ஏனு! உங்களுக்குத் தெரியாது. நான் விதவை! நான் கல்யாணம் பண்ணிக்க உரிமை இல்லே"

"ரொம்பப் பேசருயே, உம்! ஆனால் உன் கல்யாணம் தெய்வ சங்கல்பத்தைப் பொறுத்தது"

"அந்தத் தெய்வம்தான் என்னை இக்கதிக்கு ஆக்கிவிட்டதே!"

"எனக்காகத்தானே ஆக்கினர்? இல்லாவிட்டால்............"

"அந்த மாதிரி பேசாதிங்கோ."

"அதிருக்கட்டும், ஒரே கேள்வி. என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறயா? மாட்டாயா? ஒரே வார்த்தையில் பதில் சொல்லி விடு. அப்புறம் நான் உன்னைத் தொந்திரவு பண்ணவே மாட்டேன். சத்தியம்."

அவள் ஒன்றும் பேசாமல், தலை குனிந்தவளாய் கால் கட்டை விரலால் நிலத்தைக் கீச்சிக்கொண்டிருந்தாள். அடுத்த வினாடி அவள் என் முகத்தைப் பரிதாபத்தோடு நோக்கினாள்.

"மன்னிக்கணும். உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யக் கூடாது."

அவள் குரல் ஆழ்ந்த கிணற்றிலிருந்து வருவதுபோல் இருந்தது. நான் கடைசி ஆயுதத்தையும் உபயோகித்தேன்.

"நன்றி கூடவா இல்லை?"

"நன்றி இருப்பதால்தான் நான் உங்களைக் கல்யாணம் பண்ணிக்க முடியாதுனு சொல்றேன். உங்க அம்மா அப்பா..........."

"உனக்குச் சம்மதமா? அதுமட்டும் சொல்லு அப்பா அம்மா காரியம் வேறு விஷயம்"

"நான் என்ன சொல்ல? என் விதி இப்படி" அவள் அழ ஆரம்பித்து விட்டாள். தர்மசங்கடமான நிலைமை. அதை நான் உணர்ந்தேன்.

"அழாதே. நீ என்னை இஷ்டப்படுகிறாய் நிச்சயம். ஆனால் என் பெற்றோருக்குத் துரோகம் செய்யக் கூடாது என்று நினைத்து பயப்படுகிறாய். நான் அவர்களிடம் இதைப்பற்றிச் சொல்லி........"

"சொல்ல ஒன்றும் வேண்டாம் எல்லா உன் இஷ்டப்படி நடக்கட்டும்"

நாங்கள் இருவரும் திடுக்கிட்டுத் திரும்பினோம். என் தாயும் தந்தையும் செடிமறைவிலிருந்து நாங்கள் நிற்குமிடத்துக்கு வந்து கொண்டிருந்தனர்.

ஃ ஃ ஃ

எனது வாழ்வில் முதன் முதலாக அப்போது தான் வெட்கினேன். லக்ஷ்மி லஜ்ஜையால் குன்றி விட்டாள்.

'ரொம்ப நாளா நடக்கிறதோ நாடகம்' என்றார் தந்தை. நான் மௌனம் சாதித்தேன்.

"முன்னடியே சொல்லக்கூடாதா? எப்பவே காரியம் முடிந்திருக்கும்?.

"ஆனல்..........' என்று இழுத்தேன் நான்.

"என்னடா இழுக்கிருய்?"

"அவள்........ள்........வித........"

"அதெல்லாம் உன்னையாருடா கேட்டா?" வழக்கத்துக்கு மாருகத் தகப்பனரின் குரல் மிக கம்பீரமாயிருந்தது. அந்தக் காம்பீரியத்தின் தாத்பரியம் எனக்கு விளங்கவில்லை. நான் லக்ஷ்மியின் முகத்தைப் பார்த்தேன். நாணமும் சந்தோஷமும் சேர்ந்து அவளை வதைத்துக் கொண்டிருந்தன.

ஃ ஃ ஃ

அன்றைய இரவிலும், பாலை எடுத்துக்கொண்டு லக்ஷ்மி சயன அறைக்குள் நுழைந்தாள்.

"என்ன! அலங்காரம் கன முறுக்காயிருக்கே?

"எல்லாம் உங்க சந்தோஷத்துக்காகத் தான். ஆ! உங்களுக்குத் தெரியுமோ இல்லையோ, மாமி சொல்லக்கூடாதுனு சொன்ன. ஆனல் உங்ககிட்ட சொல்லாமல் இருக்கவும் முடியவில்லை..........."

"என்ன விஷயம்?" என்று கேட்டேன், அவளை இழுத்து கட்டிலில் என் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டு.

"மாமி........உம்........எப்படி சொல்றது...........?"
அவள் என்னை நோக்கி சிரித்தாள் கன்னங்குழிய.

"ஏன் தயங்குகிருய். சும்மா சொல்லு" என்றேன் நான் அவளது குழிந்த கன்னத்தில் பிரேமையோடு கிள்ளிவிட்டு.

மாமியும் என்மாதிரிதான் மாமாவைக் கல்யாணம் பண்ணிண்டாளாம்.

"ஆ! அப்படியா சங்கதி!"

எனது ஆச்சரியம் அவள் தந்த முத்தத்தில் மறைந்தது.

தனவணிக ஸ்திரீகளுக்கு!

(ஸ்ரீமதி சா. மு. விஸ்வநாதன்)

நமது தனவணிக சகோதரிகள் தற்பொழுது இருக்கும் காலத்தின் வேகத்தை அனுசரித்து ஒரு சிறு அளவு நாகரீகத்தில் சீர்திருந்தியிருக்கின்றனர். ரவிக்கைகளெல்லாம் சட்டைகளாக மாறிவிட்டன. அதிலும் மல்லிகை மொட்டு ரோஜா மொட்டு என்று எத்தனையோ ஆகிவிட்டன. சேலைகளும் சிந்தாமணி, மின்னல்கொடி என்று எண்ணற்ற புது மாதிரிகள் வந்து நாமும் பொருளாதார நெருக்கடியைக் கொஞ்சமும் கவனியாது நிறைய வாங்கி அணிகின்றோம். 40 ரூபா சேலை வாங்கிக் கட்டிக்கொண்டாலும் ரோட்டில் கிடக்கிற குப்பைகளைத்தான் அச்சேலை அரிக்கின்றது. இதற்குக் காரணம் சேலையை நன்ருக அழகாகக் கட்டிக் கொள்ளாததே. இத்துடன் மிதியடி போடுகின்றனர். சேலை காலில் பின்னும்படி கட்டிக்கொண்டு மிதியடியும் போட்டு நடப்பது மிகக் கஷ்டமாக இருப்பதுடன் சீர்திருத்தமாகவும் தெரியவில்லை. கொஞ்சநாள் முன்னதாக நமது தனவணிக ஸ்திரீகள் எவ்வளவு வெய்யிலாக இருந்தாலும், நடக்கும்பொழுது கால்களுக்கு நடையன் போடக் கொஞ்சம் கூச்சப்பட்டனர். ஆனல் 1938 முதல் அக்கூச்சம் போய்விட்டது. இன்னும் எவ்வளவு பெரிய மழையாக இருந்தாலும், உஷ்ணமாக இருந்தாலும், குடை பிடிக்க வெட்கப்படுகின்றனர். எதற்கு வெட்கப்பட்டாலும், சுகாதார முறைப்படி தேக சுகத்தைக் கருதி கால்களுக்கு மிதியடி போடுவதற்கும் குடை பிடிப்பதற்கும் வெட்கப் படக்கூடாதல்லவா? மேலும் நமது தனவணிகப் பெண்களிற் சிலர் தற்பொழுது நகை அணிவதில் தங்கள் பராக்கிரமங்களை அதிகம் காட்டாதது, மிகவும் போற்றுதற்குரியது. இம்மாதிரியே எல்லோரும் நகைகளைக் கண்டவாறு அணியாது நாகரீகமாகவேண்டிய சில சிறு ஆபரணத்தை மட்டும் அணிந்துகொண்டு வந்தால் நமது சமூகத்தில் நகைக்காகச் செலவிடும் பெரும் பணம் குறையுமல்லவா? ஆகவே நமது சகோதரிகள், ஊர் வம்பு அதிகம் பேசாமலும், மிதியடி போடுவதுபோல் குடை பிடித்தும்,

நகை அணிவதைக் குறைத்தும், உடைகளை நாகரீகத்திற் கேற்றாற் போல் அணிந்துகொண்டும் பிறர், நம்மைப் பார்த்துக் கேலி செய் யாத வண்ணம், விசேடங்களிற் செய்யும் அனாவசியச் சடங்கு களையும், ஆடம்பரங்களையும் அறவே ஒழித்தும் நமது சமூகத் தின் சீர்திருத்த நாடியான விதவா விவாகங்களை யாதொரு வித மான தங்கு தடையுமின்றிச் செய்வதற்கு வேண்டிய முயற்சி எடுத் துக்கொண்டும், நம்து தனவணிக சமூகத்தை அதி உன்னத நிலைக் குக் கொண்டுவருவார்களென்று நம்புகிறேன்.

வாழ்க்கைச் சித்திரம்

கணவனும் மனைவியும்

(ப. நீ.)

“கணவனும் மனைவியும்போல” என்று உவமையாகக் கூறுவ துண்டு. இது பெரும்பாலாருடைய வாழ்க்கையில் பிரயோசன மற்றதாகி விடுகிறது. ஒத்த கணவன் மனைவியர் நூற்றுக்கு ஓரிரண்டுகூடக்காண்பது அரிதாக இருப்பது, யாரிட்ட சாபமோ தெரியவில்லை.

கணவன் நல்ல அழகு; அடக்கம். மனைவி, பார்க்க சகிக்காத அவ்வளவு குரூரம். அடக்கம் என்றால் படி என்ன விலை என்று கேட்பாள்—மனைவி, அழகு, அன்பு, அடக்கம் அவ்வளவுக்கும் இருப்பிடம். கணவன் குடிகாரன். அவனிடம் அவள்படும் இம்சை சொல்ல முடியாதது. அவளது இந்த வாழ்க்கையில் பெறும் பலன் அடியும் உதையும்தான்—கணவன் கல்வி கற்றவன். கற்ற வளாக வேண்டுமென விரும்பினான். அக்கோட்டை இடிந்து தரைமட்டமாயிற்று. எழுத்தறிவற்ற மனைவி சொல்லிக்கொடுத்தா லும் ஏறாது—பெண்ணுக்கு வயது பதின்மூன்று; கணவனுக்கு வயது ஐம்பத்தேழு—பெண்ணுக்கு வயது இருபது. பைய னுக்கு வயது பதினான்கு.—பையன் மூன்றரை அடி; பெண் ஐந்

தரையடி—பெண் மிக ஒல்லி; பையன் சித்தானைக் குட்டி—இன்னும் இவைபோன்ற எண்ணற்றவை. இப்படியிருக்கிறது நம்முடைய இந்து சமூகம். சிறுவயதில் மணம் ஆற்றப்பட்டு இப்பொழுது பக்குவ நிலையடைந்ருதிப்போர்--குறைபடுவோர்—சாபத்திற்காளானவர்க ளென்றே சொல்லவேண்டும். உங்களுடைய ஏதாவது வயதில் திருமணமாகியிருக்கும். அப்பொழுது நீங்கள் இரண்டாவது வகுப்பில் படித்துக்கொண்டிருந்திருப்பீர்கள். மனைவி பள்ளிக்கூடம் போய்வந்துகொண்டிருப்பாள். இப்பொழுது நீங்கள் பி. ஏ., பாஸ் செய்துவிட்டீர்கள். கால வித்தியாசத்தால் உங்கள் மனைவியை அவர்களின் பெற்ருேர் படிக்க வைக்கவில்லை. படித்த மனைவி வேண்டுமென்பது உங்களுடைய இப்பொழுதையப் பிரியம். இந்த தர்மசங்கடத்திற்கென் செய்வது? இது படியாத உங்கள் மனைவியின் தவறல்ல, உங்களுடைய தவறுமல்ல. இதற்காக நீங்கள் துன்பப்பட்டு உங்கள் வாழ்க்கையின் பெரும் பகுதியை அதிருப்தியிலேயே கழிப்பானேன்? உங்கள் மனைவிக்கு கல்வி கற்றுக்கொடுங்கள். உங்கள் பிரியம்போல் உங்கள் வழியில் திருப்ப முயலுங்கள். இது அவ்வளவு சுலபமான காரியமுமல்ல. சில இடங்களில் வெற்றியென்பது மருந்துக்கும் கிட்டாமற் போகலாம். அப்படியானல் அம்முயற்சிக்கு முற்றுப் புள்ளி வைக்கவேண்டியதுதான். அதற்காகத் துன்பப்படவேண்டாம். நீங்கள் குறைபடுறீர்களென்று மனைவிக்குத் தெரியுமானல் அவளுக்கு அதிருப்தி ஏற்படும். அதுவே வியாதியாக முற்றும். வேறு வழியில்லாதபொழுது இருப்பதை வைத்துக் கூடியவரை சுகமாக வாழ்க்கை நடத்தலாமே.

பொதுவாக குறையில்லாத மனிதர்களே கிடையாதென்று சொல்வார்கள். அது ஓரளவு வாஸ்தவமே. பெரும்பாலோருக்கு ஒவ்வோர் வகையில் குறையிருந்து கொண்டேயிருக்கிறது. கணவன் நிலைதெரிந்துகூட மனைவி நகைகளில்லையே என்று குறைபடுகிருள். அஃதிருந்தால் கணவன் அழகின் எல்லையை மீறவில்லையே என்று சொல்லுகிருள். நகைகளில்லாக் குறைபடும் சகோதரியை அண்டை வீட்டுச் சகோதரிகள் சும்மாவிட்டுவிட்டாலே பெரும் புண்யம். அவளுக்கு நகைகளைக் காண்பிப்பதும் உயர்ந்த புடவை

களைக் காண்பிப்பதும், அவளிடமில்லாக் குறையை நினைவூட்டுவதும் மிகுந்த பாபகரமான செயலாகும். அந்த வம்புப் பேச்சை நிறுத்தி விடுவார்களா?

சகோதரிகள், கணவனின் கஷ்ட நஷ்டங்களை உணர வேண்டும். அடிக்கடி தேவையைச் சொல்லி இம்சிப்பது அவனுக்கு வாழ்க்கையில் வெறுப்பையே உண்டாக்கும். வாழ்க்கைக்கு திருப்தி மிக மிக அவசியம். அது இல்லாததால் ஏற்படும் தொல்லைகள் அளவற்றனவாகும். திருப்தியின்மையே பெரும் வியாதி. வாழ்க்கை இன்பகரமாக நடக்க இருபாலாரும் முயற்சிக்க வேண்டும்; சந்தோஷ மனுபவிக்கவேண்டும்.

உண்டி அறுசுவை. அதனை மனைவி அன்போடு—கரத்தில் அணிந்திருக்கும் வளையல்கள் ஒன்றோடொன்று உராயும் பொழுது ஏற்படும் கிண் கிண் என்ற சப்தத்தோடு பரிமாறுகிறது ஒரு சுவை. இஃது ஏழாவது சுவையல்லவா? இதனை அறியாதார்—அனுபவிக்க முடியாதார் எத்தனை பேரிருக்கின்றனர்! "ஐயோ போதுமே" என்று முகத்தைச் சுளித்துக் கொண்டு சொன்னபோதும் "இன்னும் கொஞ்சம் சாப்பிடுங்கள்" என்று எவ்வளவு பொறுமையோடு சொல்கிறார்கள் தாயாரும் மனைவியும். கணவனின்—புத்திரனின் வளர்ச்சியில் கவலையுறுகின்றனர் தாயாரும் மனைவியும். ஏவலாளிடம்—அவன்தான் சமயற்கார புண்ணியவான்—அவனிடமிருந்து இந்த ஏழாவது சுவையைப் பெற முடியுமா? பெண்கள் வீட்டு வேலை செய்வதன் மூலமாக அடையும் தேகப் பயிற்சியைக்கூட இந்த சமையற்கார வர்க்கம் அழித்து விட்டது.

கணவனும் மனைவியும் எல்லாவகையிலும் ஒருவருக்கொருவர் திருப்தியை அளிக்க வல்லவராக இருத்தல் வேண்டும். பெரும்பாலான குடும்பங்களில் அதிருப்தி இருந்துகொண்டேயிருக்கிறது. இருபாலாருக்கும் குறையிருந்துகொண்டேயிருக்கிறது. இது நிவர்த்திக்க முடியாதது. இருபாலாரும் வாழ்க்கையால் பிணைக்கப்படும்போது இவை கவனிக்கப் படல் வேண்டும். தாய் தந்தையரின் தவறுதல்கள்தான் வாழ்க்கையில் ஏற்படும் மனக் கசப்புகட்குக் காரணம்.

தேயிலைப் பானம் தயாரிக்கும் முறை

லண்டன் 'டைம்ஸ்' நிருபர் சமீபத்தில் ஒரு கடிதத்தில் தேயிலையின் அமளி என்று எழுதியதாவது:—

பிரிட்டிஷ் ஜனங்கள் தேயிலை விஷயத்தில் அதி நுட்பம் பார்க்கமாட்டார்கள். சில பேர்கள் அதை எப்படி தயார் செய்கின்றதென்பதைத் தெரிந்து கொள்ளுகிறார்கள். பிரிட்டிஷ் ஜனங்கள் தேயிலைப் பானம் ஒரு தேச உபகாரம் என்று கருதுகின்றனர்.

இங்கிலாந்தில் பெரிய தேயிலை வியாபாரத்தில் ஈடுபட்டிருக்கிற ஒருவர் அதை ஊர்ஜிதம் செய்கிறார். தேயிலை அருந்தும் ஜனங்கள் தேயிலையின் வாசனையைப்பற்றிக் கவனிக்கின்றனர்.

அவர்களுடைய தொழிற்சாலையில், வீட்டிற்காக உபயோகப் படுதுவதற்காக $1\frac{1}{4}$ லக்ஷம் பாக்கெட்டுகள் செய்வதற்காகவும் நல்ல ரகமாகத் தேர்ந்தெடுக்கும் விஷயத்திலும் அதிக கவனம் செலுத்துவதுடன் நல்ல ரகமாய் பொறுக்கி எடுப்பதற்காக ஒரு நாளைக்கு 1000 வகை தேயிலையை ருசிபார்க்கவே 15 பேர்களை அமர்த்தியிருக்கிறார்கள். எல்லா ஹோட்டல்களிலும் தேயிலையைக் காற்றுப்போகாமல் பொட்டலம் கட்டிவிடுகிறார்கள்.

கெடுதலான தேத் தண்ணீர் உண்டாக்குவது தேயிலையினால்ல; அறியாமையாலேதான் கெட்டுவிடுகின்றது. நம் வீடுகளிலும் சரி சமூக இடங்களிலும் தயாரிக்கும் முறை சரிவரத் தெரிவதில்லை. ஆகையால் வீட்டிலுள்ள தாய்மார்களுக்கு மிக சுலபமாகக் கற்றுக்கொள்ளக்கூடியதான தேத் தண்ணீர் தயார்செய்யும் முறையைக் கற்றுக்கொடுக்கவேண்டிய தவசியம்.

நல்ல தேத்தண்ணீர் உண்டாக்குவதற்கு முக்கியமாக 4, 5 குறிப்புகள் அவசியம். இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டார் இந்தியாவில் விளம்பரம் செய்திருக்கிறார்கள். முதலாவது நல்ல தேயிலையை உபயோகப்படுத்த வேண்டும். ஒரு பவுண்டு இந்திய தேயிலைக்கு ருசிகரமாயுள்ள 240 கோப்பை தேத்தண்ணீர் செய்யலாம். இரண்டாவது ஜலம் புதிதாகவிருக்கவேண்டும். அதை நன்றாய் காய்ச்ச வேண்டும். தேயிலையைப் போட்டு கொதிக்கும்

ஜலத்தை விடுகிற பாத்திரமானது உலர்ந்ததாக இருக்கவேண்டும். இரண்டு கோப்பைத் தேத் தண்ணீருக்கு ஒரு டீ ஸ்பூன் தேயிலை' யும் பாத்திரத்திற்காக ஒரு ஸ்பூனும் போட வேண்டும்.

தேயிலையைக் குறைந்தது 5 நிமிஷ நேரம் காய்ந்தடவுன் எடுத்துக் கொதிப்பதற்கு முந்தி அதைக் கலக்க வேண்டும். இந்த முறைப்படி தயார்செய்தால் அதற்குத் தருந்த உத்ஸாகத்தையும் பிரயோஜனத்தையும் அளிக்கத் தவருது.

:: நிகழ்ச்சிகள் ::

விதவா விவாகம்

ஸ்ரீமதி கமலம்மா என்னும் பதிறு வயது வைசிய குல விதவைக்கும், முதுகூரைச் சேர்ந்த ஸ்ரீ. பி. லக்ஷ்மையாவுக்கும் மே 22உ மறுமணம் நடைபெற்றது. மதனபள்ளி புங்கனூர் முதலிய பல ஊர்களிலிருந்தும் சுமார் 2000 பேர் விஜயஞ் செய்து சிறப்பித்தனர். மதனப்பள்ளியைச் சேர்ந்த ஸ்ரீ யம். வி. பாப்பண்ண குப்தா வைசியர்களிடையே இன்னும் அதிகமான விதவா விவாகங்கள் நடைபெற வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

சட்டசபையில் ஸ்திரீ அங்கத்தினர்

மிஸ் தெரீவியா கோரா என்ற பெண்மணி திருவிதாங்கூர் ஸ்ரீ சித்திரா ஸ்டேட் கவுன்ஸில் (மேல் சபை) மெம்பராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிருர். இதற்கு முன் பல பெண்மணிகள் திருவிதாங்கூர் சட்டசபையில் அங்கம் பெற்றிருக்கின்றனர். எனினும் அவர்களெல்லாம் கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்டவர்கள் தாம். தேர்ந்தெடுக்கப் பெற்றிருக்கும் முதற் பெண்மணி இவரே.

கலப்புமண மசோதா

இந்துக்களிலுள்ள சாதிகளுக்கும் சாதிப்பிரிவுகளுக்குமிடையே நடைபெறும் கலப்பு மணத்தைச் சட்ட சம்மதமாக்கும் நோக்கத்துடன் ஸ்ரீ பிரகாசர் மத்திய அசம்பிளியில் ஒரு மசோதா கொண்டுவர அனுமதி கோரியுள்ளார்.

பொட்டுக்கட்டினல்

திருப்பூரிலிருந்து எட்டு மைல் தூரத்திலுள்ள பெருமாநல்லூரில் திண்டுக்கல் ஸ்ரீ ஷண்முகநாதன் தலைமையில் செங்குந்தர்கள் மகாநாடு நடைபெற்றது. தம் பெண்களுக்குப் பொட்டுக் கட்டும் செங்குந்தர்களைச் சாதிப்பிரஷ்டஞ் செய்ய வேண்டுமென ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

ஐந்து வயதில் அன்னையானள்!

பெருவில், லிமா என்னும் இடத்தில் ஐந்து வயதுக்கும் குறைந்த பிராயமுள்ள ஒரு சிறுமி, நல்ல ஆரோக்கியமுள்ள குழந்தையைப் பெற்றிருப்பதாக ஒரு செய்தி வெளியாகி யிருக்கிறது. இந்தக் 'குழந்தை'த்தாய்க்கு விலாப்புறம் ஆபரேஷன் செய்தே குழந்தையை வெளியே எடுத்தனர். தாயும் குழந்தையும் க்ஷேமமாயிருக்கின்றனர். இந்த ஆபரேஷனை அறுபது டாக்டர்கள் கவனித்தனராம். உலகிலேயே மிக இளைய தாய் இந்தப் பெண்தானும்.இது காறும் பத்துவயதுச்குக் குறைந்த பெண் பிரசவித்ததாகத் தெரியவில்லை.

ஸ்ரீமதி கமலாதேவி

ஸ்ரீமதி கமலாதேவி, தமது குமாரனுடன் ஜூன் 2உ பம்பாயிலிருந்து ஐரோப்பாவுக்குப் பிரயாணமானுர். ஜூலை 2வது வாரம் கோபன் ஹேகனில் நடைபெறப் போகும் சர்வதேச ஸ்திரீகள் சம உரிமை மகாநாட்டுக்கும், க்யூபாவில் நடைபெறப் போகும் உலக சமாதான மாதர் காங்கிரசுக்கும் செல்வார்.

வரதட்சணையைக் கொண்டுவா

கலியாண தினத்தன்று பெண்ணின் பெற்றேர் சொன்னபடி வரதட்சிணையைக் கொடுக்கத் தவறியதால், மணமகன், தான் வந்த காரிலேயே இருந்துகொண்டு ரெஜிஸ்திரார் ஆபீஸுக்குச் செல்ல மறுத்த ருசிகரமான சம்பவம் கொழும்பில் நடைபெற் றிருக்கிறது. மணப்பெண், கண்ணீரும் கம்பலையுமாய் பரிதாபக் கோலத்துடன் ஆபீஸினுள் நின்றுகொண் டிருந்தாள். ஆயிரக் கணக்கான கூட்டம் மாப்பிள்ளையின் காரைச் சுற்றி நின்றுகொண்டு கேலி செய்தது. ஆனல் பணமல்லவா? அவர் அசையவேயில்லை. பெற்றேர் எப்படியோ முயற்சி செய்து பேசின தொகையைக் கொண்டு கொடுத்த பிறகே மணச் சடங்குகள் நிறைவேறின. மணமகனுக்கு வயது 38. ஸிலோன் சர்க்கார் ரயில்வேயில் வேலை பார்ப்பவர். மணப் பெண்ணுக்கு 28 வயது.

நாயர்-பிராமண கலப்பு மறுமணம்

ஒரு நாயர், ஒரு பிராமண விதவையை மணந்தால், அவர் சாதிப் பிரஷ்டராவாரா? சாதிப்பிரஷ்டராய் விட்டாரென்று, அவரது குடும்பப் புரோகிதர் வைதீகக் கருமங்களை நடத்திக் கொடுக்க மறுத்தால், அதற்காகக் கோர்ட்டு மூலம் பரிகாரம் பெறலாமா? இந்தப் பிரச்னைகளெல்லாம், திருப்பணித் துறையில், ஸ்ரீ பரமேசுவர மேனன் என்பவர் தமது குடும்பப் புரோகிதர்மீது தொடுத்துள்ள வழக்கில் தீர்க்கப்பட வேண்டியிருக்கின்றன. ஸ்ரீ மேனன் சமீபத்தில் அன்னபூரணி அம்மாள் எனும் பிராமண விதவையை மணந்து கொண்டார்.

கோவையில் 'நல்லதங்காள்'!

சுமார் 25 வயதுடைய வெள்ளையம்மாள் என்ற பெண், தனது புருஷனல் கைவிடப்பட்டது காரணமாக, தனது இரு ஆண் குழந்தைகளையும் கிணற்றில் தூக்கிப் போட்டுவிட்டு, தானும் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்துகொண்

டதாகக் கோயம்புத்தூர் செய்தி யொன்று தெரிவிக்கிறது.

ஒரே பிரசவத்தில் 4 குழந்தைகள்

எல்லூருக்குச் சமீபம் நாயனிப் பள்ளி என்ற கிராமத்தில் தேவரப் பள்ளி வெங்கம்மா என்ற ஹரிஜனப் பெண் ஒரே 'பிரசவத்தில் நான்கு ஆண்குழந்தைகளைப் பெற்றிருக்கின்றாள். எல்லாக் குழந்தைகளும் சௌக்கியமாக இருக்கின்றன.

வரதட்சணைத் தடை மசோதா

சிந்து அஸம்பிளியில், வரதட்சணைத் தடை மசோதா சட்டமாக நிறைவேறி விட்டது. நிச்சயதார்த்தம் செய்து ஆறுமாத காலத்திற்குள்ளும், கல்யாணமான இரண்டு வருடத்திற்குள்ளும் கல்யாணத்தை முன்னிட்டு, மாப்பிள்ளைக்கு எந்த விதமான வரதட்சணை கொடுக்கவோ அல்லது கொடுப்பதாக ஒப்பந்தம் செய்யவோ கூடாதென இம்மசோதா தடுக்கிறது.

ஸ்ரீ முத்துலட்சுமி ரெட்டிபேச்சு

மே 29உ மாலை பெஸண்டு ஹாலில் ஸ்ரீ ஏ. காளேஸ்வரராவ் தலைமையில் நடைபெற்ற மாணவர் கூட்டத்தில் டாக்டர் ஸ்ரீமதி முத்துலட்சுமி ரெட்டி விதவைகளின் பரிதாப நிலையை விளக்கிப் பேசினார். மாணவர்கள், இளமை மணத்தால் ஏற்படும் தீமைகளை விளக்கிக் கிராமங்களில் பிரசாரம் செய்ய வேண்டுமென்று அவர் கேட்டுக் கொண்டார். பெற்றோர்களின் கடமை தம் பிள்ளைகட்கு மண முடிப்பதல்லவென்றும் ஆனால் அவர்கட்குக் கல்வி பயிற்றுவிப்பதே யென்றும் அவர் குறிப்பிட்டார்.

மனைவிகள் விற்பனை

மண்டி சமஸ்தானத்தில் ஒரு நாடோடி வகுப்பாரிடையே கொடிய வழக்கமொன்று இருந்து வருகிறது. அதாவது கல்யாணமாவதற்கான தருந்த வயதை யடைந்துள்ள பெண்கள் அவர்களின் எடைக்கு ஏற்றவாறு ரூபாய்க்கோ, சாவரனுக்கோ விற்கப்படுகிறார்கள். சிற்சில சமயங்களில் பணமுடை காரணமாகப் புருஷன்மார்களும் தங்கள் மனைவிகளை விற்றுவிடுகிறார்கள். சாதாரண விலை பவுண்டு 1-க்கு இரண்டு முதல் மூன்று ரூபாய் வரையில். இப்பொழுது இவ்வழக்கத்தை யொழித்துவிடத் தீவிர முயற்சிகள் நடந்து வருகின்றன. பெண்கள் விற்பனைமீது சர்க்கார் அதிகமான வரியை விதித்திருக்கிறார்கள். இதன் மூலம் சர்க்காருக்கு ஏராளமான வருமானம் கிடைக்கிறது. முற்போக்கு வாய்ந்தவர்களில் பலர் சமீபத்தில் மகாநாடு கூடி ஷை வழக்கத்தைக் கண்டித்து அதைஒழித்துவிடும்படி மன்னரைக் கேட்டுக்கொண்டனர்.

கிராமபோன் மூலம் காதல்

மெய்டன்ஹெட் என்ற இடத்திலுள்ள ஒரு நடிகைக்கு, அவளது காதலன் தனது காதல் செய்தியை வீட்டில் செய்யப்பட்ட ஒரு கிராமபோன் பிளேட்டில் பதிவுசெய்து அனுப்பினானும். தன்னை மணந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளும் அச் செய்தி ஒரு காதல் பாட்டுடன் முடிவுற்றது. காதலி தனது பதிலை பிளேட் மூலம் அனுப்பவில்லை!

சமூக சீர்திருத்தப் புத்தகங்கள்.

"மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு சகாயம்.

கைம்பெண்ணின் கண்ணீர்.

இது ஆசிரியர் கே. வி. எஸ். வாஸ் அவர்களால் எழுதப்பட்டு மாதர் மறுமண சகாய சங்கத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது. இதில் விதவைப் பெண்கள் படுந்துயரமும் அதற்குச் செய்யவேண்டிய பரிகாரமும் தெளிவுபடக் கூறப்பட்டுள்ளன. விதவா விவாகம் சுருதி-யுக்தி- அனுபவபூர்வமாக ஒப்புக்கொள்ளப்பட்டதென்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. இக்கட்டுரை முதலாவது பரிசு பெற்றதாகும். விலை அணு ஒன்று. தபாற் செலவு வேறு.

மான நஷ்ட வழக்கு.

இது பெண்ணுக்குப் பணம் வாங்கிச் செய்ததற்காக பெண்ணின் தம்பி மைனர், மேஜரான பிறகு தன் குடும்பத்திற்கு அவமானம் வந்து விட்டதென்று கோர்ட்டில் வழக்கிட்டு நீதிபெற்றதாக எழுதப்பட்ட ஒரு சிறு நூல். கோர்ட் நடவடிக்கையும் மலைவிழுங்கி முத்தப்ப செட்டியாரின் விசாரணை விவரங்களும் தீர்ப்பும் படிப்பவர்க்கு வெகு உற்சாக மூட்டக் கூடியன. விலை அணு ஒன்று. தபாற் செலவு வேறு.

சொர்னவல்லி.

இதில் அடுத்தாள் வேலையின் அவஸ்தை, பிரிந்த காதலர்களின் பெருந்துன்பம், தீர்த்த யாத்திரைக்குப் பெண்கள் சென்று படும்பாடு, பச்சிளம் பெண்கள் விதவையராக்கப்படும்கஷ்டங்கள் முதலிய பகுதிகளும், விதவைப் பெண் வைக்கும் ஒப்பாரியும் படிப்பவர் உள்ளத்தை உருக்கிவிடுவது திண்ணம். உபந்யாசங்களும் மேற்கோள்களும் சந்தர்ப்பத்துக்கேற்ற இனிய பாட்டுக்களும் நிறைந்து விளங்கும். எளிய அழகான நடையில் அமைந்துள்ளது. இதன் விலை ரூ. 1—0—0. "மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு மட்டும் 0—12—0. தபாற் செலவு வேறு.

அமிர்தவல்லி மாலை.

இது நகரத்தார் பெருமையையும் காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பையும் விளக்குகிறது. பால்யப் பெண்களை மணம் செய்வதும் அதை விதவையாக்கிக் கண்ணீர் வடிப்பதும் எவ்வளவு கொடுமை யென்பதையும், அதனாலேற்படும் இன்னல்களையும் படிப்பவர் மனத்தில் பசுமரத்து ஆணிபோல் பதியச் செய்யும்படி அமைந்துள்ளது. யாவரும் எளிதில் பாடக்கூடிய இனிமையான அம்மானைப் பாட்டில் பாடப்பட்டிருக்கிறது. விலை 0—4—0. "மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு மட்டும் 0—3—0. தபாற் செலவு வேறு

மானேஜர், மாதர் மறுமணம் ஆபீஸ், காரைக்குடி.

REGD. NO. M. 3603.

சிறந்த புத்தகங்கள்.

மாதர் மறுமணப் பாடல் திரட்டு.

இது ஒரு சிறந்த பாடல்புத்தகம். இதில் 27-பாடல்கள் அடங்கியுள்ளன. இலக்கியப்பாடல்களும், புதுவகையான மெட்டுப் பாடல்களும் நிறைந்திருக்கின்றன. 64-பக்கமுள்ள இப் புத்தகத்தின் விலை இரண்டணுதான். தபாற்கூலி வேறு.

ஜீவகாருண்யத் திருக்குறள்.

"வள்ளுவர் பாட்டின் வள முரைக்கின் வாய்மடுக்கும்" என்று புகழப்படும் திருக்குறளிலிருந்து ஜீவகாருண்ய சம்பந்தமான 20 குறளைப் பொறுக்கிப் பெரிய எழுத்தில் பொழிப்புரையுடன் அச்சிடப் பட்டிருக்கிறது. பள்ளிக்கூட மாணவர் பயில்வதற்கு மிக இன்றியமையாதது. விலை அணு அரை. மொத்தமாக வாங்கினுல் விலை சகாயமாகத் தரப்படும். தபாற்கூலி வேறு.

மாதர் மறுமணம்.

இப் பெயர்கொண்ட அழகிய புத்தகம் மகிபாலன்பட்டி திருவாளர் மு. சின்னையா செட்டியாரவர்களால் இயற்றப்பெற்றது. அழகான நடை. நகரத்தார் சமூகத்திற்கு மாதர் மறுமணம் எவ்வளவு அவசியமென்பதற்குக் காரணங்களைப் பசுமரத்தாணியெனப் பதியும்படி எழுதியிருக்கிறார்கள். உதாரணமாகக் கூறப்படும் ஏழு கதைகள் வியக்கத்தக்கனவாகும். அழகான புத்தகம் விலை 0—4—0 "மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு 0—3—0. தபாற் செலவு வேறு.

காசில்லாமல் உபதேசம்.

பஞ்சாட்சர உபதேசம் செய்வதற்கு ஆடம்பரமும் அனுவசியமான தடபுடலும் வேண்டியதில்லை யென்பதற்கு வேண்டிய காரணங்கள் இதில் விளக்கப் பட்டிருக்கிறது. அதோடு தண்ணீர் மந்திரமும் இதில் சொல்லப் பட்டிருக்கிறது. விலை அணு ஒன்று. தபாற்கூலி வேறு.

மாதர் மறுமண பென்ஸில்

"விதவை மணமே விடுதலை அளிக்கும்" என்னும் வாக்கியம் தமிழிலும் ஆங்கிலத்திலும் பொறிக்கப்பட்டுள்ள அழகான பென்சில், நல்ல நிறம். சுகமாக எழுதக்கூடியது. இந்தியாவில் செய்யப்பெற்றது.

விலை பென்சில் 1-க்கு	0—0—6
டஜன் 1-க்கு	0—5—0
குரோஸ் 1-க்கு	3—6—0

தபாற்செலவு வேறு.

Printed and Published by S. MURUGAPPA for the Mathar Marumana Sahaya Sangam at Kumaran Power Press, Karaikudi.
Editor: M. Maragathavalli.